பக்கங்கள் : பதின்நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்:15 வள்ளுவர் ஆண்டு 2030 கார்த்திகை12 ஞாயிற்றுக்கிழமை(28-11-1999) UTHAYAN A Lively National Tamil Daily கதிர்:01

## போர் ஓய்ந்து - தடைகள் நீங்கி - ஆக்கிரமிப்பு அகன்று

# இயல்பு நிலையில் சமாதானப் பேச்சு

# மூன்றாந் தரப்பு மத்தியஸ்தத்துடன்!



## சிங்களத் தலைமைக்கு பிரபாகரன் அழைப்பு

யாழ்ப்பாணம்,நவம்பர்.28

**"போர் ஓய்ந்து, பொருளாதாரத்தடைகள் அகன்று, எமது மண்ணை ஆக்கிரமித்து நிற்கும் படைகள் விலகிய ஓர் இயல்பு நிலையில் -சமாதான நல்லெண்ண புறநிலையில் - மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்துடன் சமாதானப் பேச்சுக்கள் நடைபெறவேண்டும் என்று பேச்சுக்கான கதவைத் திறந்தபடி, சிங்கள தேசத்துக்கு நாம் ஒரு நல்லெண்ண சமிக்ஞையைக் காட்டுகின்றோம்."**

**- இவ்வாறு மாவீரர் தினத்தை ஒட்டி தமிழ் மக்களுக்கு, தாம் ஆற்றிய உரையில் விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் தெரிவித்திருக்கின்றார்.**

அவரது மாவீரர் தின உரையை 'புலிகளின் குரல்' வானொலி நேற்று மாலை ஒலிபரப்பியது. அந்த உரையின் முழு விவரம் வருமாறு:-

எனது அன்பிற்கும் மதிப்பிற்கும் உரிய தமிழீழ மக்களே!

இன்றைய நாள் எமது தேசத்து விடுதலை வீரர்களின் நினைவுநாள்; தாயகவிடுதலையை தமது உயிரினும் மேலாக நேசித்து, அந்த இலட்சியத்துக்காகப் போராடி மடிந்த எமது தேசத்தின் சுதந்திரவீரர்களை இன்று நாம் எமது இதயக்கோயில்களில் சுடரேற்றி கௌரவிக்கின்றோம்.

### விடுதலை விதைகள்

எமது தாயக தேசத்தின் விடுதலைக்காக ஆயிரமாயிரம் புலி வீரர்கள் களமாடி ஓய்ந்தார்கள். எமது ஈழமண்ணின் மார்பைப் பிளந்து அந்த வீரர்களைப் புதைத்தோம். உயிரற்ற சடலங்களாக அவர்கள் மண்ணுக்குள் மறையவில்லை. விடுதலை விதைகளாகவே எமது தாயின் மடியில் அவர்களைப் புதைத்தோம். வரலாற்றுத்தாய் அவர்களை அரவணைத்துக் கொண்டாள். ஆயிரமாயிரம் தனிமனித உயிர்கள் சரித்திரத்தின் கருவூலத்தில் சங்கமித்தன. அவ்வுயிர்கள் கருவாகி, காலத்தால் உருவம்பெற்று, தேசத்தின் சுதந்திரமாக வடிவம் பெற்றுவருகின்றன.

'தமிழீழம்' என்ற சுதந்திரதேசம் வரலாற்றின் குழந்தையாக, விரைவில் பிறப்படும். அந்த சுதந்திரதேசத்தின் ஆன்மாவாக - ஆளுமையாக - எமது

(14 ஆம் பக்கம் பார்க்க)

## மாவீரர் தினம் அனுஷ்டிப்பு

வவுனியா,நவ.28

தமிழீழ மாவீரர் நாள் நேற்று வன்னியில் இராணுவக்கட்டுப்பாடற்ற பகுதியில் எழுச்சியாக, உணர்வுபூர்வமாக கொண்டாடப்பட்டதாக வவுனியாவுக்குக் கிடைக்கும் செய்திகள் தெரிவித்தன.

அலங்கார வளைவுகள் அமைக்கப்பட்டு மஞ்சள், சிவப்புக் கொடிகளால் வீதிகள் அலங்கரிக்கப்பட்டு எங்கும் பதாகைகள் கட்டப்பட்டு உணர்வுபூர்வமாக நிகழ்வுகள் அங்கு இடம்பெற்றன.

மன்னாரில் இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசங்களில் விசேட நிகழ்வுகள் இடம்பெற்றன. நகரில் சில இடங்களில் மாவீரர்நாள் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தன.

வவுனியா நகரிலும் கடைகள் நேரகாலத்துடன் பூட்டப்பட்டதால் நண்பகலுக்குப் பின்னர் நகர் சனநடமாட்டமின்றி வெறிச்சோடிக் காணப்பட்டது.

கிழக்கு மாகாணத்தில் இராணுவக்கட்டுப்பாடற்ற மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டப் பிரதேசங்களில் மாவீரர்தின நிகழ்வுகள் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

(உ-க-3)

## சரணடைந்த ஏழு சிப்பாய்கள் மல்லாவியில் வைத்து விடுவிப்பு

வவுனியா,நவ.28

வன்னியில் தாம் மேற்கொண்ட 'ஓயாத அலைகள்-3' நடவடிக்கையின் போது தம்மிடம் சரணடைந்த ஏழு சிப்பாய்களை நேற்றுக் காலை விடுவித்து செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு அதிகாரிகளிடம் ஒப்படைத்துள்ளதாக விடுதலைப்புலிகள் அறிவித்துள்ளனர்.

மல்லாவியில் வைத்து விடுதலைப் புலிகளின் அரசியல் துறைத் துணைப் பொறுப்பாளர் எஸ்.கரிகாலன் இந்தச் சிப்பாய்களை செஞ்சிலுவைச் சர்வதேசக்குழுவின் மல்லாவி வதிவிடப் பிரதிநிதி செல்வி வலோரி கம்போனியிடம் ஒப்படைத்ததாகவும் புலிகள் அறிவித்துள்ளனர்.

விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் மனிதாபிமான அடிப்படையில் இந்தச் சிப்பாய்களை விடுவித்துள்ளதாகவும் அறிவிக்கப்பட்டது.

விடுவிக்கப்பட்ட ஏழு சிப்பாய்களும் கடல் மார்க்கமாக மன்னார் நகருக்கு அழைத்துச் செல்லப்பட்டனர் என்றும் -

அவர்கள் இன்று அவர்களது உறவினர்களிடம் ஒப்படைக்கப்படுவர் என்றும் -

செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு வட்டாரங்கள் தெரிவித்தன.

(உ-க-3)

## சந்திரிகா பதவி இழப்பதையே பிரபா பெரிதும் விரும்புகிறார்

### அவரின் உரை அதையே காட்டுகிறது என்கிறது பி.பி.ஸி.

லண்டன்,நவ.28

ஜனாதிபதி சந்திரிகா குமார துங்க பதவியில் இருந்து வெளியேற வேண்டும் என்பதையே விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் விரும்புகிறார் என்பது அவரது மாவீரர்தினச் செய்தியில் இருந்து தெரிகிறது.

இப்படி பி.பி.ஸி. கருத்து வெளியிட்டுள்ளது.

பிரபாகரனின் மாவீரர் செய்தி குறித்து பி.பி.ஸி. தெரிவித்த விமர்சனத்திலேயே இக்கருத்து வெளியிடப் பட்டுள்ளது.

அந்த விமர்சனத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

ஜனாதிபதி குமாரதுங்கவின் ஐந்தாண்டு கால ஆட்சி தமிழர்களுக்கு ஒரு சாபக்கேடு என அவர் விமர்சித்தார்.

சுதந்திர இலங்கையில் நடைபெறும் மிகக்கொடிய இன அடக்குமுறை வரலாற்றில் சந்திரிகாவின் ஆட்சியே மிக அடக்குமுறைமிக்க கொடூர

(14 ஆம் பக்கம் பார்க்க)

## வன்னியில் 'ராகிங்' குறித்து

## முறைப்பாடு செய்தவர் மீது இங்கு 'ராகிங்' கொடூரம்!

யாழ்ப்பாணம்,நவ.28

வன்னியில் 'ராகிங்' பற்றிய தகவலை அங்கு சம்பந்தப்பட்டோருக்கு முறைப்பாடு செய்ததற்காக யாழ்.பல்கலைக்கழக முதலாம் வருட மாணவன் ஒருவன் யாழ். பல்கலைக்கழகத்தில் வைத்து 'ராகிங்' செய்யப்பட்டு, குடையினால் வயிற்றில் குத்தப்பட்டான்.

இதனால் காயமுற்ற அந்த மாணவன் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப் பட்டான்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் யாழ். பல்கலைக்கழக கைலாசபதி

(14 ஆம் பக்கம் பார்க்க)

## சிப்பாய்கள் 7 பேர் விடுவிப்பு: புலிகளின் சமாதான சமிக்ஞை!

### பேராசிரியர் வஜிர தேரர் கூறுகின்றார்

கொழும்பு,நவ.28

"தம்மிடம் சரணடைந்த ஏழு இராணுவத்தினரை நேற்றுக்காலை விடுதலைப்புலிகள் விடுவித்துள்ள செயலானது, புலிகள் தரப்பிலிருந்து விடுக்கப்பட்ட சமாதான சமிக்ஞையாக கருதலாம்"

- இப்படி பேராசிரியர் கும்புறுகமுவ வஜிர தேரர் பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று நடைபெற்ற சமாதானக் கருத்தரங்கில் உரையாற்றும்போது கூறினார்.

அங்கு உரையாற்றும்போது அவர் மேலும் கூறியதாவது:-

விடுதலைப்புலிகள் காட்டிய சமாதான சமிக்ஞைக்கு அரசாங்கமும் தனது நல்லெண்ணத்தைக் காட்ட வேண்டும். இருதரப்பினருக்கும்இடையே நம்பிக்கையையும் நல்லெண்ணத்தையும் கட்டியெழுப்ப இதை ஒரு வாய்ப்பாக பயன்படுத்திக்கொள்ளவேண்டும்.

அநுராதபுரம் ராஜதானி காலத்தில் புத்த பிக்குகள் சாசனத்தைக் கட்டியெழுப்ப தமிழர்கள் ஆற்றிய மகத்தான சேவையை நாம் நினைவு கூர வேண்டும்.

பௌத்த சாசனத்தை கட்டியெழுப்புவதில் தமிழர்கள் செய்த சேவைக்காக தற்போதைய பௌத்த பிக்குகள் இரு சமூகங்களுக்கும் இடையே நம்பிக்கையை வளர்ப்பதில் பெரும் பங்காற்றவேண்டும்.

அரசியல் தலைவர்கள் யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவருவதற்கான சரியான திட்டத்தை முன்வைக்காத வரை

(14 ஆம் பக்கம் பார்க்க)

## யுத்த சூனியப் பிரதேசமாக கேதீஸ்வரத்தை அறிவிக்குக!

### சித்தார்த்தன் கோரிக்கை

கொழும்பு,நவ.28

இந்துக்களின் புனித ஸ்தலமான திருக்கேதீஸ்வரம் ஆலயம் சூழவுள்ள பிரதேசத்தை யுத்தசூனியப் பிரதேசமாகப் பிரகடனம் செய்யவேண்டும் என்று வன்னி மாவட்ட புளொட் நாடாளுமன்ற உறுப்பினரும், அந்த அமைப்பின் தலைவருமான த.சித்தார்த்தன் அரசாங்கத்திடம் கோரியுள்ளார்.

அந்தப் பிரதேசத்தில் இராணுவச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதைத் தவிர்க்க யுத்த சூனியப்பிரதேசமாகப் பிரகடனம் செய்யவேண்டும் என்றும் -

இந்துக்களின் முக்கிய ஆலயங்களில் ஒன்றாக அது விளங்குகின்றது என்றும் - அவர் தமது கோரிக்கையில் தெரிவித்துள்ளார்.

(உ-க-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்**

# பதவி உயர்வுக்கான நிபந்தனை;
# ஆசிரியர்கள் ஏமாற்றம் தெரிவிப்பு

வலிகாமம் தெற்கு நவ. 28

இலங்கை ஆசிரிய சேவையுள் உள்ளீர்ப்பு செய்யப்பட்ட ஆசிரியர்களின் — சம்பளத்திட்டத்தின் உச்ச நிலையை அடைந்துள்ள ஆசிரியர்களுக்கு பதவி உயர்வு வழங்குவது சம்பந்தமாக வடக்கு—கிழக்கு மாகாண அமைச்சு அறிவித்துள்ள நிபந்தனைகளுள் காணப்படும் நிபந்தனை ஒன்றினால் பல ஆசிரியர்கள் பதவி உயர்வு வாய்ப்பை இழக்கும் பரிதாப நிலையை எதிர்நோக்கியுள்ளனர்.

பதவி உயர்வுக்கு தேவையான தகுதிகளுள் ஒன்றாக, இவ்வாசிரியர்கள் கஷ்டப்பிரதேச பாடசாலை ஒன்றில் குறைந்தது மூன்று வருடங்கள் சேவைபுரிந்திருக்கவேண்டும் என குறிக்கப்பட்டுள்ளது.

இலங்கை ஆசிரியர் சேவை தரம்3 - I 2 - II ஆகிய தரங்களைச் சேர்ந்த ஆசிரியர்களே இந்நிபந்தனை காரணமாக பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

தரம் 3-II, தரம் 2-I உச்ச சம்பளம்பெறும் ஆசிரியர்களுக்கு இந்நிபந்தனை விதிக்கப்படவில்லை.

சஷ்டப்பிரதேச பாடசாலையில் சேவையாற்றி இருக்கவேண்டும் என்ற நிபந்தனை விதிக்கப்பட்ட தரத்தில் உள்ள ஆசிரியர்களே ஆசிரிய சேவையில் அதிகமாகக்காணப்படுகின்றனர்.

புதிய பதவி உயர்வு தமக்கு கிடைக்கும் என எதிர்பார்த்த பல ஆசிரியர்கள் இந்த நிபந்தனையினால் ஏமாற்றமடைந்துள்ளனர்.

இரண்டு தரத்திலும் உள்ளவர்களுக்கு மட்டும் விதிக்கப்பட்டுள்ள இந்நிபந்தனைகளை நீக்கி, தமக்கும் பதவி உயர்வு கிடைக்க வழி செய்து தருமாறு சம்பந்தப்பட்ட ஆசிரியர்கள் இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்தினரின் கவனத்துக்கு கொண்டு வந்துள்ளனர். (ஐ-152)

## நிறுவுநர் நினைவு நாள்

அச்சுவேலி, நவ. 28

அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலையின் நிறுவுநர் நினைவு நாளும் பரிசளிப்பு விழாவும் அதிபர் சி. தங்கவேல் தலைமையில் எதிர் வரும் முதலாம் திகதி புதன் கிழமை நடைபெறும்.

முதன்மை விருந்தினராக யாழ்- கல்விவலய உதவிக் கல்விப்பணிப்பாளர் க. கனகசிங்கமும் சிறப்பு விருந்தினர்களாக கோப்பாய் பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர் இ சிவஞானசுந்தரமும், சிவஸ்ரீ விருத்தகிரீசர் குருக்களும் கலந்து கொள்வர். (ஐ-11)

## கருத்தரங்கும் ஒன்றுகூடலும்

வலிகாமம் தெற்கு. நவ. 28

வலிகாமம் கல்வி வலயத்தில் சமூக உளநலக் கருத்தரங்கில் பங்குபற்றி முடித்த வலிகாமம் கல்வி வலயத்தைச் சேர்ந்த 45 ஆசிரியர்களுக்கும், அவர்களுடன் கலந்து கொண்ட பாடசாலைகளைச் சேர்ந்த இவ்விரண்டு மாணவர்களுக்குமான வருட இறுதி மீளாய்வுக் கருத்தரங்கும் — ஒன்றுகூடல் நிகழ்வும் யூனியன் கல்லூரி மண்டபத்தில் இன்று ஞாயிற்றுக் கிழமை காலை நடைபெற உள்ளது. (ஐ-152)

## ஆறுமுகநாவலர் குருபூசை

யாழ்ப்பாணம், நவ.28

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரது குருபூசைத் தினவிழா யாழ். பல்கலைக்கழக ஸ்ரீ பரமேஸ்வரன் ஆலயத்தில் நாளை திங்கள் காலை 7 மணி முதல் கொண்டாடப்படவுள்ளது

இந்த நிகழ்வில் ருத்திராபிஷேகமும் விஷேட பூசையும் 'நாவலர் வழி' என்ற தலைப்பில் யாழ். பல்கலைக்கழக நுண்கலைத்துறைத் தலைவர் திருமதி நா. செல்வநாயகம் வழங்கும் சிறப்புச் சொற்பொழிவும் இடம்பெறவுள்ளன. [க]

★ ★ ★

கொழும்புத்துறை, நவ. 28

திருநெல்வேலி கலாமன்ற சனசமூக நிலைய மண்டபத்தில் நாளை திங்கட்கிழமை பிற்பகல் நான்கு மணிக்கு நாவலர் பணிமன்றச் செயலாளர் ஆ. மகாலிங்கம் தலைமையில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் குருபூசை நடைபெறும்.

இந்த நிகழ்வில் கலாநிதி எஸ் சிவலிங்கராஜாவும், பலாலி ஆசிரியர் கலாசாலை பிரதி அதிபர் சிவமகாலிங்கமும் சிறப்புரை ஆற்றுவர். (க-30)

★ ★ ★

கைதடி நவ 28

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் குருபூசையும்விழாவும் நாளை திங்கட்கிழமை கைதடி தக்கடியன் புலம் ஞானவைரவர் ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

கைதடி சைவ ஐக்கிய சங்கத் தலைவர் வ. சுப்பையா தலைமையில் கூட்டுப்பிரார்த்தனை வழிபாடுகளும் பிற்பகல் 3 மணிக்கு விழாவும் நடைபெறும்.

''நாவலர் பிறந்திலரேல்'' என்ற தலைப்பில் சைவப் புலவர் க. நடராசா உரையாற்றுவார்.

★ ★ ★

யாழ்ப்பாணம், நவ. 28

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் குருபூசை நாளை திங்கட்கிழமை காலை 10 மணிக்கு நல்லூர் ஸ்ரீதுர்க்காதேவிமணி மண்டபத்தில் சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி தலைமையில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் துர்க்காபுரம் மகளிர் இல்ல மாணவிகளின்பண்ணிசையும், செல்வி கோகிலா இராமகிருஷ்ணனின் சொற்பொழிவும் ஆறு திருமுருகனின் சிறப்புச் சொற்பொழிவு இடம்பெறவுள்ளன. (க)

★ ★ ★

யாழ்ப்பாணம், நவ. 28

எதிர்வரும் 6 ஆம் திகதி ஆரம்பமாகும் ஜி. சி. ஈ. சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்ற உள்ள யாழ் மத்திய கல்லூரி மாணவர்களுக்குப் பெற்றோர், ஆசிரியர்கள் ஆசி வழங்கும் நிகழ்வும் ஆறுமுக நாவலர் குருபூசையும் நாளை திங்கட்கிழமை காலை 9 30 மணிக்கு கல்லூரி தம்பர் மண்டபத்தில் நடைபெற உள்ளன

பிரதம விருந்தினராக சிவத் தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியும் சிறப்பு விருந்தினர்களாக நல்லை ஆதீன முதல்வர், யாழ். புனித மரி

(13 ஆம் பக்கம் பார்க்க)


சுனில் ஆட்ஸ்

Photo Chrome  Photo Friends
Colour Chrome

நீங்கள் விரும்பும் COLOUR LAB இல் கழுவிப் பெற்றுக் கொள்ளலாம்.

★ 15 - 11 - 99 வரை எம்மிடம் ஒப்படைக்கப்பட்ட கலர் படச் சுருள்களுக்கான படங்கள் வந்துவிட்டன.

★ 30 - 11 - 99 அன்று படச் சுருள்கள் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்படும்.

★ சுனில் ஆட்ஸ் ★

272, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(சி/10017)



வீடியோ CD வெளியீடு

★ சுந்தரி நீயும் சுந்தரன் நானும்
★ மனம் விரும்புதே உன்னை [CD]
★ தாஜ்மஹால்

விஷ்ணு வீடியோ
K. K. S. Rd,
கோண்டாவில்.

எமது வடமராட்சி வாடிக்கையாளர் நன்மை கருதி பிரதிகளை கீழ் உள்ள முகவரியில் பெறலாம்.

லவ்லி றைக்கோடிங் சென்ரர்
நெல்லியடி.

(71349)



லிபேட்டி அச்சுவேலி.

விஜயகாந் நடித்த
கண்ணுபட போகுதய்யா

காட்சிகள்: 10-30, 2-30
T.P.No.070-212223
070 - 212678

(71295)



ராஜா
யாழ்ப்பாணம்

அர்ஜுன் - மீனா, ரம்பா மற்றும் பலர் நடித்த
செங்கோட்டை

10-30, 2-00, 5-00
(சி/9949)



நாகம்ஸ்
சுன்னாகம்

4 ஆவது வெற்றிவாரமாக
விஜய் - ஷாலினி நடித்த
காதலுக்கு மரியாதை

காட்சிகள்:
11-00, 2-30.
(புதிய நேரம்)

நாளை முதல்
ரோஜாவைக் கிள்ளாதே

(71336)


## நல்லூர் கோயில் பகுதியில் சைக்கிள் திருட்டு முறியடிப்பு

நல்லூர், நவ .28

நல்லூர் கந்தசுவாமி கோயிலடியில் நிறுத்தப்பட்டிருந்த சைக்கிள் ஒன்றைத் திருட முயன்ற ஒருவர் அங்குள்ள இளைஞர்களால் கையும் மெய்யுமாகப் பிடிக்கப்பட்டார்.

இச்சம்பவம் நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் 5 30 மணிக்கு இடம் பெற்றது.

சைக்கிளை நிறுத்திவிட்டு அதன் உரிமையாளர் ஆலயத்துக்குள் வழிபாட்டுக்காகச் சென்று விட்டார். பூட்டப்பட்டிருந்த மேற்படி சைக்கிளை மற்றும் ஒருவர் வந்து எடுத்தபோது அயலில் நின்றிருந்த இளைஞர் ஒருவர் உடனடியாக அவரை அணுகி விசாரித்தபோது திருட்டு முயற்சி அம்பலமானது.

கடந்த வியாழக்கிழமையும் நல்லூர் கந்தசுவாமி கோயிலில் நிறுத்தப்பட்டிருந்த பெண்களுக்கான சைக்கிள் ஒன்றும் களவுபோயுள்ளது. கடந்த வாரத்தில் மட்டும் ஆறு சைக்கிள்கள் இப்பகுதியில் களவாடப்பட்டுள்ளதாகக்கூறப்படுகிறது. [ஐ-103]

## இளம்பெண்ணை காணவில்லை!

உரும்பிராய் தெற்கைச் சேர்ந்த இளம்பெண் ஒருவர் காணாமல் போயுள்ளதாக உறவினர்களால் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

உரும்பிராய் தெற்கு செல்வபுரத்தைச் சேர்ந்த சிவலிங்கம் மோகனப்பிரியா (வயது 17) என்ற பெண்ணே கடந்த 26 ஆம் திகதி தொடக்கம் காணமல் போயுள்ளார். (உ-9-10)

# மரண அறிவித்தல்கள்

## சின்னத்தம்பி அருள்கிருபைநாதன்

வட்டு. கிழக்கைச் சேர்ந்த சின்னத்தம்பி பொன்னம்மா தம்பதிகளின் கனிஷ்ட புதல்வன் சின்னத்தம்பி அருள்கிருபைநாதன் 26-11-99 அன்று அகாலமரணமானார்.

அன்னார் விக்கினேஸ்வரியின் அன்புக் கணவரும் ராகவி, தர்சிகனின் அன்புத் தந்தையும் விநாசித்தம்பி (இ. போ. ச.), குகலட்சுமி, தணிகநாயகி, சண்முகநாதன் (இ. மி ச), நாகேஸ்வரி, சத்தியதேவி ஆகியோரின் சகோதரனும் மற்றும் காலஞ்சென்ற சி அப்புத்துரை (சிமெந்துக் கூட்டுத்தாபனம்) கு நடேசு, இ மகேந்திரராசா [C. G R., திருமலை], க. கந்தசாமி [இரசாயனக் கூட்டுத்தாபனம்] ஆகியோரின் மைத்துனரும் அருணாசலம் தம்பதிகளின் மருமகனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(28-11-99) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கியாறு மயானத்துக்கு 2 மணியளவில் எடுத்துச் செல்லப்படும் என்பதனை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்;
சி. சண்முகநாதன்
(இலங்கை மின்சாரசபை)

வட்டுக்கிழக்கு,
வட்டுக்கோட்டை.

(71344)

## சுப்பையா நவரத்தினம்

நுணாவிலைப் பிறப்பிடமாகவும் தாவடி வடக்கு காளிகோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பையா நவரத்தினம் அவர்கள் 27-11-99 அன்று காலமானார்.

அன்னார் சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும் முரளிதரன் (கனடா), காலஞ்சென்ற யமுனா, மற்றும் கங்கா (லண்டன்), காவேரி ஆகியோரின் அன்புத் தந்தையும் பரனின் மாமனாரும் விதுரனின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28-11-99) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிற்பகல் 1 மணியளவில் தாவடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
ஆர். பஞ்சலிங்கம்
(மைத்துனர்)

தாவடி வடக்கு,
கொக்குவில்.

(71346)

## திருமதி சிவராசா புஷ்பராணி
(வவா)

திருநெல்வேலி, வளாக ஒழுங்கையை வசிப்பிடமாக கொண்ட திருமதி சிவராசா புஷ்பராணி 25-11-1999 அன்று இந்தியாவில் இறைபதம் எய்தினார்.

அன்னார் சிவராசா (செல்வராசா)வின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை(சக்கரை)— சின்னம்மா அவர்களின் மூத்தமகளும் காலஞ்சென்ற அரியகுட்டி, காலஞ்சென்ற அன்னப்பிள்ளை அவர்களின் மருமகளும் ஜெயசிறி (நோர்வே), ஜெயதீஸ் (பிரான்ஸ்), பிரசன்னா, காயத்திரி ஆகியோரின் பாசமிகு தாயாரும் புலேந்திரன் (ஜேர்மனி), இலங்கேசன் (ஜேர்மனி) கருணாதேவி, புவீந்திரன் (ஜேர்மனி), ரஞ்ஜனாதேவி (பர்கானா), உதயசாந்தி (பிரான்ஸ்), சுமதி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ரவீந்திரனின் (நோர்வே) மாமியாரும் இராஜேஸ்வரன் (யாழ். மாநகர சபை), ஜலீஸ் (ஆசிரியர் எருக்கலம்பிட்டி ம. வி), சிவலோகநாதன் (பிரான்ஸ்), N. சிறி (பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனியும் ஜெனித்தின் அன்புப் பேர்த்தியுமாவார்.

இறுதிக் கிரியை பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சிவராசா
(கணவர்)

வளாக ஒழுங்கை,
திருநெல்வேலி.

(71347)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## சித்திரவதை செய்யும் கடிதம்!

யாழ்ப்பாணக் குடாநாட்டில் 1996, 1997 ஆம் ஆண்டுகளில் நூற்றுக் கணக்கானோர் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட பின்னர் காணாமற் போய் விட்டனர் எனக் கருதப்பட்டது. இவர்களில் 355 பேரை தேடித்தரமுடியாதவர்கள் பட்டியலில் அரசாங்கம் சேர்த்திருக்கிறது.

காணாமற் போனவர்கள் குறித்து விசாரணை நடத்திய குழுவே மேற்படி 355 பேரையும் தேடிக்கொள்ள முடியாதவர்கள் எனத் தீர்மானித்திருக்கிறது. அந்த முடிவை பாதுகாப்பு அமைச்சு சம்பந்தப்பட்ட 355 பேரின் பாதுகாவலர்களுக்கும் கடித மூலம் அறிவித்துள்ளது.

அரசாங்கம் அனுப்பிய இந்தக் கடிதங்கள், காணாமற்போனதாகக் கருதப்படுவோரின் பாதுகாவலர்களான பெற்றோர்கள் மற்றும் உறவினர்களின் நெஞ்சங்களை வெந்தபுண்ணில் வேல் பாய்ச்சுவது போலக் குத்தியுள்ளன.

தமது பிள்ளைகளுக்கும் உறவினர்களுக்கும் என்ன நடந்தது என்று தெரியாமல், கடந்த மூன்று வருடங்களுக்கு மேலாக நடைப் பிணங்களாக வாழ்ந்து வரும் பாதுகாவலர்களை, இந்தக் கடிதங்கள் மேலும் குழப்பம் அடையச் செய்துள்ளன.

தமது பிள்ளைகள் உயிரோடு இருக்கிறார்களா அவ்வாறாயின் எங்கிருக்கிறார்கள்; அவ்வாறில்லையேல் அவர்களுக்கு என்ன ஆயிற்று என்பதனை அறியவே பாதுகாவலர்கள் விரும்புகிறார்கள். இரண்டில் ஒன்று தெரிந்தால் மட்டுமே அவர்கள் ஒரு முடிவுக்கு வர முடியும். தத்தம் மனதுக்குத் தீர்க்கமாக முடிவு சொல்ல இயலும்.

அவ்வாறின்றி, தேடித்தர முடியாதவர்கள்என்ற 'தொழில் நுட்ப'ச் சொற்பதத்தினால் பாதுகாவலர்களை அரசாங்கம் மறைமுகமாகச் சித்திரவதை செய்திருக்கிறது.

தங்கள் பிள்ளைகளை அரசாங்கப் படையினரே கைது செய்தனர். ஆகையால் அரசாங்கம் அவர்கள் குறித்துப் பொறுப்பான பதில் ஒன்றைச் சொல்ல வேண்டும் என்று பெற்றோர்கள் எதிர்பார்த்தார்கள். ஆனால் அரசோ, பாதுகாவலர்களின் மன உணர்வுகளையும் வேதனையையும் சற்றும் உணர்ந்து கொள்ள முடியாத மரக்கட்டை நிலையில் இருந்து செயற்படுகிறது. அதனாலேயே இப்படி ஒரு வழுவல் நழுவல் சொற்பதத்தைப் பயன்படுத்திக் கடிதங்களை அனுப்பியிருக்கிறது.

காணாமற்போனதாகக் கருதப்பட்ட இத்தனை பேரும் மரணம் அடைந்திருக்க வேண்டும் என்றே நம்பப்படுகிறது அல்லது கொள்ள வேண்டியுள்ளது என்று தெரிவித்திருந்தாலும் கூட அது வேறு

அவ்வாறு கூறினால் அரசபடைகள் தான் அவர்களைக்கொன்று விட்டன என்று ஊகிக்கப்படும் என்று அரசு அஞ்சுகிறதா? அல்லது தமது பிள்ளைகள் இன்னும் உயிரோடு இருக்கிறார்கள் என்று நம்பும் பெற்றோரிடம் வெட்டு ஒன்று துண்டு இரண்டாகக்கூறி அவர்களை ஏன் பேதலிக்க வைக்க வேண்டும் என்ற "இரக்கத்துடன்" இந்தக் கடிதங்களை அனுப்பி உள்ளதா?

இத்தகைய கடிதத்தின் மூலம் காணாமற்போனவர்களுக்கு மரண அத்தாட்சிப்பத்திரம் வழங்குவதற்கான முன்னோடி ஏற்பாடா, இது?

அன்பு, பாசம், பந்தம், இரக்கம், கருணை போன்ற மன உணர்வுகள் எல்லா மனிதர்களுக்கும் இன, மத, குல, பிரதேச வேறுபாடின்றிப் பொதுவானவை. ஒரு தாயின் தலைமையில் உள்ள அரசுக்கு இவை மரத்துப் போனது ஏனோ? உண்மை காலம் கடந்தும் பகிரங்கமாகும்!

# வி. அ. அட்டைக்கு விண்ணப்பித்தால் பற்றுச்சீட்டு வழங்குமாறு கோரிக்கை

## அசௌகரியங்களைத் தவிர்க்க வசதியாக

வலி. மேற்கு, நவ. 28

விசேட அடையாள அட்டைக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகளுக்கு பற்றுச்சீட்டுக்கள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு வலி. மேற்கு பிரதேச செயலக கிராம உத்தியோகத்தர்கள் பிரதேச செயலரிடம் கூட்டாக வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

வலி. மேற்கு பிரதேச செயலர் பிரிவில் கப்பல், விமானம் மூலம் வந்து மீளக்குடியமர்ந்த நூற்றுக்கணக்கானோர் விசேட அடையாள அட்டைக்கு கடந்த ஆறு மாதங்களுக்கு முன்னர் விண்ணப்பங்களை சமர்ப்பித்தும் இன்று வரை அடையாள அட்டைகள் விநியோகிக்கப்படவில்லை. இதனால் பொது மக்கள் பெரும் அசௌகரியங்களை சோதனைச் சாவடிகளில் எதிர்நோக்குகின்றனர். ஆகவே தேசிய அடையாள அட்டைகளுக்கு விண்ணப்பிப்பவர்களுக்கு வழங்கப்படும் பற்றுச்சீட்டுக்கள் போன்று விசேட அடையாள அட்டைக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகளுக்கும் பற்றுச்சீட்டுக்கள் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென பிரதேச செயலர் கா. சந்திரராசாவிடம் கிராம உத்தியோகத்தர்கள் கூட்டாக வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

பிரதேச செயலர் யாழ் மாவட்ட செயலகத்தினருடன் தொடர்பு கொண்டு நடவடிக்கை மேற்கொள்வதாக தெரிவித்தார்.

(ஐ-175)

## முத்திரையிட்ட தபால் உறைகள் தட்டுப்பாடு

நல்லூர், நவ. 28

யாழ்ப்பாணம் பிரதம தபாலகத்திலும் ஏனைய பல உப அஞ்சல் அலுவலகங்களிலும் முத்திரையிடப்பட்ட தபாலுறைகள் இன்மையால் பொதுமக்கள் மிகவும் சிரமப்பட வேண்டியுள்ளது.

[ஐ-103]

## கோப்பாய் பொலிஸ் பிரிவில் கசிப்பு உற்பத்தி, விற்பனை தொடர்பாக 70 வழக்குகள்

வலி. கிழக்கு, நவ. 28

உயிர்கொல்லியான கசிப்பு உற்பத்தி மற்றும் விற்பனை தொடர்பாக கோப்பாய் பொலீஸ் நிலைய எல்லைக்குள் மட்டும் இவ் வருடம் இது வரை 70-க்கும் மேற்பட்ட குற்றச்சாட்டுக்கள் யாழ். மாவட்ட நீதிமன்றில் பதிவாகியுள்ளன.

இது தொடர்பான விசாரணைகளில் மொத்தமாக 4 லட்சம் ரூபாவுக்கும் அதிகமான தொகை அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

கோப்பாய் பொலீஸ் நிலையப் புள்ளி விவரங்கள் மூலம் இத் தகவல் தெரியவந்துள்ளது.

இப் பிரதேச எல்லைக்குள் கசிப்பு உற்பத்தி மற்றும் விற்பனையைக் கட்டுப்படுத்த பொலீஸார் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

(ஐ-180-4)

## கடற்றொழிலாளர்கள் 50 பேருக்கு கடன் உதவி

வலி. கிழக்கு, நவ. 28

கடற்றொழிலாளர்களின் நன்மை கருதி அகதிகளுக்கான ஐ. நா. தூதரக நிதி உதவியுடன் குருநகர் கடல் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் 5 லட்சம் ரூபாவை கடல் தொழிலாளருக்கு கடனாக வழங்கவுள்ளது

யாழ். பிரதேச செயலர் ஊடாக சங்கத்திற்கு வழங்கப்பட்ட இந்நிதி கடல் தொழிலில் ஈடுபடும் 50 பயனாளிகளுக்கே தொழிலை மேம்படுத்தும் நோக்கத்துக்காக தலா 10 ஆயிரம் ரூபா என்ற அடிப்படையில் சுழற்சி முறையில் குறைந்த வட்டிக்கு வழங்கப்படவுள்ளதாக சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

[ஐ-180]

## திருவாசக விழா பண்ணிசைப் போட்டி

கொழும்புத்துறை, நவ. 28

தொண்டமனாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை நடத்தும் திருவாசக விழா 'பண்ணிசைப் போட்டி பேரவையின் ஆதரவில் எதிர்வரும் டிசெம்பர் மாதம் 19 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை நடைபெறும்.

திருவாசகவிழா தொடர்பாக பாடசாலை மாணவர்களிடையே வழமை போல பண்ணிசைப் போட்டி நடத்தப்படவுள்ளது.

இப்போட்டியில் பங்குபற்ற விரும்பும் மாணவர்கள் தாங்கள் கல்வி கற்கும் தரம் (1999 இல்) பாடசாலை பிறந்த திகதி ஆகிய விவரங்களை பாடசாலை அதிபர் அல்லது பெற்றோர் மூலம் உறுதிப்படுத்தி எதிர் வரும் டிசெம்பர் மாதம் 10 ஆம் திகதி வெள்ளிக்கிழமைக்கு முன் தபால் மூலமோ அல்லது நேரிலோ கையளிக்குமாறு ஆச்சிரம சுவாமி செ. மோகனதாஸ் தெரிவித்துள்ளார்.

[ஐ-30]

## நூற்றாண்டு மலர் வெளியீடு

அச்சுவேலி, நவ. 28

அச்சுவேலி மகாவித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பு விழாவும் நூற்றாண்டு மலர் வெளியீடும் அடுத்த மாதம் 2 ஆம் திகதி வியாழக்கிழமை அதிபர் திருமதி ச. கனகராசா தலைமையில் நடைபெறும்.

முதன்மை விருந்தினராக கோப்பாய் பிரதேச செயலர் க.கேதீஸ்வரன் கலந்துகொள்வார்.

நூற்றாண்டு விழா மலர் ஆய்வுரையைகலாநிதிகாரை. செ. சுந்தரம்பிள்ளை நிகழ்த்துவார்.

(ஐ-11)

## நிதி சேகரிப்பு

வலி. மேற்கு, நவ. 28

வலிகாமம் மேற்கு கலாசாரப் பேரவைக்கு அன்பளிப்பு நிதி மூலமாக நிதி சேகரிக்கப்பட்டு வருகின்றது.

இந்த ஆண்டு ஏப்ரல்மாதம் தொடர்ச்சியாக நான்கு நாள்களுக்கு மாபெரும் இசை விழா ஒன்றினை நடத்திய கலாசார பேரவையினர் அடுத்த ஆண்டு இம்மாதிரியானதொரு இசை விழாவினையும் இலக்கிய விழா கலை விழா என்பவற்றையும் நடத்துவதற்கு திட்டமிட்டுள்ளனர்.

(ஐ-4-175)

## அறிவுறுத்தல் கூட்டம்

தென்மராட்சி கல்விவலயப் பாடசாலைகளில் ஜி. சி. ஈ சாதாரண தரப் பரீட்சையில் மேற்பார்வையாளர்கள், நிரந்தர நோக்குநர்கள், இணைப்பாளர்களாக கடமையாற்றவுள்ளவர்களுக்கான அறிவுறுத்தல் கூட்டம் எதிர்வரும் 2 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

(க-133)

## தரம் 10 மாணவர்களுக்கு விருப்புக்குரிய பாடங்கள்

புன்னாலைக்கட்டுவன், நவ. 28

புதிய கல்விச் சீர்திருத்தத்துக்கு அமைய அடுத்த ஆண்டில் இருந்து தரம் 10 இல் கல்வி பயிலும் மாணவர்களுக்கு விருப்பத்துக்குரிய பாடங்களாக புவியியல், அபிவிருத்தி, வரலாறு ஆகிய மூன்று சமூகவியல் பாடங்கள் அறிமுகம் செய்யப்படவுள்ளன.

இந்தப் பாடங்களுக்கான ஆசிரியர்களுக்குரிய கைநூல்கள் வெளியிடப்பட்டுள்ளன என்றும் —

மாணவர்களுக்கான பாட நூல்கள் வெளியிடப்பட மாட்டாது என்றும் —

கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

எனவே ஆசிரியர்கள் தமக்கு வழங்கப்பட்ட கைநூல்களின் துணையுடனேயே மாணவர்களுக்கு இந்தப் பாடங்களைக் கற்பிக்க வேண்டி இருக்கும்.

(ஐ-4-133)

### நாளை

கார்த்திகை 13

திங்கட்கிழமை

திதி: ஸப்தமி

முன் இரவு 11.23 வரை.

நட்சத்திரம்: ஆயிலியம்

முற்பகல் 11.10 வரை.

சுபநேரம்: 12.13 — 1.43

ராகுகாலம்: 7.43 — 9.13

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

### உதயவாக்கு

தனக்குந் தெரிந்தவற்றை மட்டும் மனிதன் பேசுவானாகில், மனிதனுக்கு அமைதி நிலவும்.

— பெர்னாட்ஷா

## எதிரொலி... - இடியன் -

- இந்தியா ஆளில்லாத விண்கலமொன்றை சந்திரனுக்கு அனுப்பப் போகின்றதாம்!
  - ★ திரும்பி வரும் போது அங்கிருக்கின்ற ஔவைப் பாட்டியும் அதில் ஏறி வருவாரா என்பதை அறியத் தமிழ்நாட்டுக் குழந்தைகள் ஆவலாக இருக்கின்றனர்;
- இனப்பிரச்சினை சம்பந்தமாகத் தெளிவான ஆணையைப் பெறுவதற்காகவே தேர்தல் முன்கூட்டியே நடத்தப்படுகின்றதாம்;
  - ★ ஆணையைப் பெறுவது தான் நோக்கம் என்று சொல்லப்பட்டாலும் ஆனையை விரட்டுவதற்கு இதுவே பொருத்தமான காலப்பகுதி என நினைத்தது தான் முக்கியமான காரணம் போலத் தெரிகின்றது.
- வீதி ஒழுங்குகளைக் கடைப்பிடிக்குமாறு மாணவர்களை அதிபர்கள் வலியுறுத்த வேண்டும் என ஆலோசனை கூறப்பட்டுள்ளது.
  - ★ நல்ல ஆலோசனை தான்; ஆனால் வீதிகளே ஒழுங்கில்லாமல் இருக்கும் போது......?
- இலங்கையின் முதலாவது பரிசோதனைக் குழாய்க் குழந்தை சமீபத்தில் கொழும்பில் பிறந்துள்ளது
  - ★ இனி எத்தனை (பரி) சோதனைகளை அது எதிர் கொள்ள வேண்டி வருமோ?
- தன்னுடைய குறிக்கோள் நிறைவேறும் வரை பாகிஸ்தானில் ஜனநாயக ஆட்சி ஏற்படமாட்டாது என்கின்றார் இராணுவ ஆட்சித் தலைவர்!
  - ★ தான் இறக்கும்வரை இராணுவ ஆட்சித் தலைவராக இருக்கவேண்டும் என்துதான் அவருடைய குறிக்கோளாக இருக்குமோ?
- லீவு கொடுக்க மறுத்த மேலதிகாரியைச் சுட்டு விட்டுத் தானும் தற்கொலை செய்து கொண்டாராம் பொலீஸ் உத்தியோகத்தர் ஒருவர்.
  - ★ லீவு எடுக்கவேண்டிய தேவையோ, கொடுக்க வேண்டிய தேவையோ, அந்த இருவருக்கும் இனி இல்லை!
- தமக்குத் தாமே பட்டங்களைச் சூட்டிக்கொள்வோர் தொகை யாழ்ப்பாணத்தில அதிகரித்து வருகின்றது என்கிறார் நல்லை ஆதீன முதல்வர்.
  - ★ உண்மைதான்! யாழ்ப்பாணத்தில் ஒவ்வொரு வீட்டிலும் குறைந்தது ஒரு "பட்ட" தாரியாவது இருக்கும் நாள் வெகு தூரத்திலில்லை.
- கொழும்பிற்குக் கப்பலில் வாழைப்பழத்தை அனுப்ப மேற்கொள்ளப்படும் ஏற்பாடுகளை இனிப்பான செய்தி என வரவேற்கின்றார் வாசகர் ஒருவர்!
  - ★ கப்பல் போக்குவரத்தின் காலத்தையும் வேகத்தையும் நினைக்கும் போது, கொழும்பிலுள்ளவர்களுக்கு அது கசப்பான செய்தியாக மாறிவிடக் கூடாதே என்பதுதான் பலருடைய பிரார்த்தனை!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### இறைச்சிக் கோழி

இறைச்சிக்கோழி (Broilers) விற்பனைக்கு உண்டு. தினமும் சுத்தம் செய்து கொடுக்கப்படும். தொடர்புகளுக்கு:- இல - 40, கோயில் வீதி, யாழ்ப்பாணம். [71258]

### மணமக்கள் தேவையா?

எம்மிடம் எல்லா மதத்திலும் உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்கள் உள்ளனர், படம் சாதகத்துடன் தொடர்பு கொள்ளவும். தொடர்புகளுக்கு: துர்க்கா திருமண சேவை, இல - 178, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். [71297]

### சித்தி விநாயகர் சோதிடம்

சாதகம் எழுத, பொருத்தம் பார்க்க, அதிர்ஷ்ட எண் முறையில் பெயர் அமைக்க கிரக தோச யந்திரங்களுக்கு கொழும்பில் 22 வருட சோதிட அனுபவம் பெற்ற விஸ்வபிரம்ம ஸ்ரீ மா. தங்கவேல் 9, டச்சு வீதி, சாவகச்சேரி. [71250]

### விற்பனைக்கு

இல - 711 (415), காங்கேசன்துறை வீதியில் யாழ். இந்துக் கல்லூரிக்கு அருகில் 3 பரப்புக் காணியுடன் மேல் மாடி வீடும் முன் கடையும் அதற்குப் பக்கத்தில் 15 குளி காணி, கிணறு சுற்றுமதிலுடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 101/1, ஒட்டுமடம் வீதி, யாழ்ப்பாணம். [71298]

பிறவுண் கலர் டோமன் 5 மாதம் [ஆண்] டாங்சோன் 8 மாதம் [ஆண்] கறுப்பு நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு. ஞாயிறு சந்திக்கவும். தொடர்பு: மு. ஐயாத்துரை, M S. வேன், கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில். [71300]

டீ பிறீசர் பெரிது, 2500 றொபின் ஜெனரேற்றர் (டீசல்) ரெலிபோன் பூத் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: சி. குணம், 42, பாடசாலைக்கு அருகில், மானிப்பாய் வீதி, தாவடி. [71210]

சிறிது பாவித்த நல்ல நிலையிலுள்ள வீடியோபுறொஜெக்டர் PLC 400 மொடல் பனசோனிக் விற்பனைக்குண்டு. தொடர்பு: சிவாமினி, சிவன் கோயிலடி, யாழ்ப்பாணம். [71318]

சங்கானை பிரதான வீதியில் 4 பரப்புக் காணியுடன் கூடிய வீடும் கடைகளும் விற்பனைக்கு உண்டு. தனித்தனியாகவும் தரப்படும். தரகர் தேவையில்லை. தொடர்புகளுக்கு: தி குணசிங்கம், சேக்கிள சென்ரர், சங்கானை. (71183)

அண்மையில் கொழும்பில் இருந்து தருவிக்கப்பட்ட புதிய ஆட்டோ (பஜாஜ்) ஒன்று விற்பனைக்கு உண்டு. (நிறம் பச்சை - 206-) விவரங்களுக்கு தொடர்பு: இ. பரமேஸ்வரி ஐயனார் வீதி, கல்வயல், சாவகச்சேரி. (71308)

கொழும்பில இருந்து தருவிக்கப்பட்ட டீப்பிறீசர் (Deep Freezer) மற்றும் பயணியர் றேடியோ செட் (Pioneer Kit) மற்றும் வெற்றுப் பெட்டிகள், போத்தல்கள் விற்பனைக்கு உண்டு தொடர்பு:- இல. 398, பிரதான வீதி, யாழ்ப்பாணம் (71313)

### ஆடுகள் விற்பனைக்கு

8 மாதங்கள் நிரம்பிய நல்ல இன கடா, மறி இரு ஆடுகள் விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு 16/5, சீனியர் ஒழுங்கை, யாழ்ப்பாணம், [71302]

### தவறிவிட்டது

சங்குவேலி வடக்கு, மானிப்பாயைச் சேர்ந்த துரைராசா சத்தியானந்தன் என்பவரது விசேட அடையாள அட்டை (0906010559) வதிவிடத்திற்கும் அளவெட்டிக்குமிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து அவருடைய வதிவிட விலாசத்தில் அல்லது மெடிலான்ட் பாமசியில் (மானிப்பாய்) ஒப்படைத்து உதவவும். சன்மானம் வழங்கப்படும். (71303)

திருமதி செல்லப்பு பூமணியின் தேசிய அ. அட்டை [368330077V], விசேட அ. அட்டை [0903037471), மற்றும் செல்வி செல்லப்பு சுமதியின் தேசிய அ. அட்டை [698013087V), விசேட அ. அட்டை [0903037260[ என்பன 25-11-99 அன்று யாழ். செயலகத்தில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் அம்மன் கோயிலடி, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியில் ஒப்படைத்துதவவும். (71319)

யாழ்ப்பாணம் கொட்டடியைச் சேர்ந்த சாம்பசிவம் சரோஜினிதேவி என்பவரது தேசிய அடையாள அட்டையும் (இல. 485952470 V) விசேட அடையாள அட்டையும், 16 - 11 - 99 அன்று கொட்டடி சந்திக்கும் வைத்தீஸ்வரா கல்லூரிக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் 502, கே. கே. எஸ். வீதி, அருள்ஜோதி சோதிட நிலையத்தில் (மனோகரா தியேட்டர் முன்பாக) ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (71317)

பெண்களுக்கான கைச்சங்கிலி ஒன்று 22 - 11 - 99 அன்று தாவடிச் சந்திக்கும், குளப்பிட்டிச் சந்திக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து கரன் மருந்தகம், தாவடிச்சந்தி அல்லது இராமலிங்கம் வனிதா மஞ்சத்தடி, இணுவில் கிழக்கு எனும் முகவரியில் ஒப்படைக்கவும். (71323)

### O/L ENGLISH PAPER

பரீட்சைக்குப் போவதற்கு முன் ஆசிரியர் சோமசுந்தரத்தின் மாதிரி வினாத்தாளைப் பாருங்கள் பலனுண்டு விலை ரூபா 10, கிடைக்குமிடம் பூபாலசிங்கம், யாழ்ப்பாணம், நாயகபாலன் மானிப்பாய். [71307]

### ஆங்கில வகுப்பு

சிறுவயதில் இருந்தே ஆங்கிலத்தில் கதைக்க, எழுத, வாசிக்க, இலக்கணம் பயில சிறு பிரிவாக பாடசாலை மாணவர்களுக்கு உகந்தது. ஆங்கிலம் மூலம் ஆங்கிலம். ஆசிரியர் ந. விக்னேஸ்வரன் ஆச்சாரி, நாகலிங்க சுவாமிகள் வீதி (பிளர்க் வீதி), சங்கானை. [71327]

### இறைச்சிக்கோழி

இறைச்சிக்கோழி [புறொயிலர் [கல்பேட் விற்பனைக்கு உண்டு. தினமும் பெற்றுக் கொள்ளலாம். சுத்தம் செய்தல் இலவசம். தொடர்புகளுக்கு: கண்ணா வீடியோ சென்ரர் வளவு, இல. [31, மாஸ்ஸ் பாடசாலை வீதி, உடுவில், சுன்னாகம். (71186)

இறைச்சிக்கோழி (புறொயிலர்) சில்லறையாக விற்பனைக்கு உண்டு. தினம் பெற்றுக் கொள்ளலாம். (காலை முதல் மாலை வரை) சுத்தம் செய்தும் கொடுக்கப்படும். தொடர்புகளுக்கு:- Lucky Palaly Road. Thirunelvely. (71324)

### விற்பனைக்கு

சிறந்த பாவிப்பில் உள்ள Sony Video Camera Recorder (Handy Cam) CCD FX 730 VEIFX 830 VE ஒன்று இதன் எல்லா உபகரணங்களுடனும் Operation LCD Screen] உட்பட விற்பனைக்கு உண்டு. மிகத் தெளிவான படங்கள் கையாளுதல் மிகச் சுலபம். தொடர்பு. Dr. A நடராசா இராசமணி இல்லம், வதிரி, கரவெட்டி. (71123)

### மணமக்கள் தேவை

ஜேர்மனியில் நிரந்தர வதிவிடம் பெற்ற 1973-ம் ஆண்டு மணமகனுக்கும் 1976 ஆம் ஆண்டு மணமகளுக்கும் படித்த அழகான உள்ளூர், வெளிநாடு மணமக்கள் தேவை. விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 972, மே/பா உதயன் கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம், (71083)

### விண்ணப்பப் படிவம்

அரசாங்க மற்றும் மாகாண அரசாங்க சேவையின் பொது எழுதுநர் சேவை மற்றும் அங்கீகரிக்கப்பட்ட வேறு சேவைகள், சிறாப்பர்சேவை, கணக்கு பதியுநர் சேவை, பண்டசாலைக்காப்பாளர் சேவை மற்றும் சுட்டெழுத்தாளர் சேவை ஆகியவற்றின் வகுப்பு II பிரிவு ''அ'' விற்கு தரமுயர்த்துவதற்கான படிவம் A 4 தாளில் தயாரிக்கப்பட்டது. நாயகபாலன், மானிப்பாய். (71305)

### தேவை

யாழ். பிறவுண் றோட்டில் ஒருவீடு அல்லது இரண்டு பரப்பு காணியும் யாழ். கஸ்தூரியார் வீதி, (கன்னாதிட்டி) பகுதியில் ஒருகடை வாடகைக்கு அல்லது விலைக்குதேவை. தொடர்பு: விளம்பர இல. 974, மே/பா உதயன் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (71310)

### சோதிடம்

புத்தாயிரமாண்டு (கி. பி 2000) உங்களுக்கு எப்படி? எங்கும் விற்பனையாகின்றன. பிறந்த திகதிகளுக்கும் இராசிகளுக்கும் பலாபலன்கள் V. A சிவராசா (சோதிடர், வேலணை), 152 B, அரசடி றோட், கந்தர்மடம், யாழ்ப்பாணம். (71315)

## கண்ணீர் அஞ்சலி

எமது சக மாணவன்

**கோபிநாத்தின் அன்புத் தாயார்**

**திருமதி பாலேந்திரன் சசிகலா**

அமரத்துவம் எய்திய செய்தி கேட்டு ஆழ்ந்த கவலை அடைந்தோம். எமது ஆழ்ந்த அனுதாபங்களை அவரது குடும்பத்தவர்க்கும் ஆறுதல் மொழிகளை நண்பனுக்கும் கூறுகிறோம்.

11 ஆம் ஆண்டு மாணவர்கள்

மகாஜனக் கல்லூரி,
தெல்லிப்பழை. (71320)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

கைதடி இணுங்கித்தோட்டம் அருள்மிகு கந்தசாமி ஆலய பரிபாலன சபையின் உபதலைவரும் மேற்படி ஆலயத்தின் திருப்பணிச் சபையின் தலைவருமாகிய

**திரு. கா. வே. முத்துக்குமாரசாமி**

அவர்கள் அண்மையில் அகில இலங்கைக்குமான சமாதான நீதிவானாக நியமனம் பெற்றதையிட்டு மனதார வாழ்த்துவதுடன் எல்லாம் வல்ல முருகப்பெருமான் அருள் சிறப்போங்க மேலும் தொடர்ந்து சேவையாற்ற வேண்டுமென பாராட்டி வாழ்த்துகின்றோம்.

கைதடி இணுங்கித்தோட்டம்,
அருள்மிகு கந்தசாமி ஆலய
பரிபாலன சபையினர்.

கைதடி. (சி/ 10005)



## தொலைபேசி உதிரிப்பாகங்கள் விற்பனைக்கு

- மோட்டோரோலா-கேபிள்லைன் அதற்குரிய வயர்கள் தேவையான அளவில் பின் அடித்துக் கொடுக்கப்படும்.
  பனசொனிக் பக்ஸ் (580-6801780) பனபோன் ரெலிபோன்
- போட்டோ கொப்பி மெஷின் ரோணர் அதற்குரிய உதிரிப்பாகங்கள்.
- அடையாள அட்டைக் கவர்கள் தேவையான அளவுகளில்.
- பிளாக் அன்ட் வைற் போட்டோ கெமிக்கல் மற்றும் றேடியோ, வீடியோ, ஓடியோ கசற்.
- மணிக்கூடு (மணிக்கூட்டு பற்றறிகள்).

யாவும் பெற்றுக்கொள்ள வேண்டிய ஒரே இடம்:

**செல்வம் ஸ்ரோர்ஸ்**

330, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(71321)

உ

நல்லூர் தவப்பெருந்திரு
ஸ்ரீலஸ்ரீ

## ஆறுமுகநாவலர் பெருமான் குருபூசை

**29 - 11 - 1999** திங்கட்கிழமை
(கார்த்திகை மகம்)

இடம்: நல்லூர் ஸ்ரீ துர்க்காதேவி மணி மண்டபம்.

தலைவர்: பண்டிதை சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி
**தங்கம்மா அப்பாக்குட்டி J.P.** அவர்கள்
தலைவர், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை.

நேரம்: முற்பகல் 10.00 மணி

### நிகழ்ச்சி விவரம்

பண்ணிசை: துர்க்காபுரம் மகளிர் இல்லம்

சொற்பொழிவு: செல்வி கோகிலா **இராமகிருஷ்ணன்** அவர்கள்

சிறப்புச் சொற்பொழிவு: செஞ்சொற் செல்வர்
**திரு. ஆறு. திருமுருகன்** அவர்கள்
ஆசிரியர், ஸ்கந்தவரோதயக் கல்லூரி, சுன்னாகம்.

நன்றியுரை:

நண்பகல் 12 30 மணிக்கு
**மகேஸ்வர பூசை நடைபெறும்**

அன்பர்கள் அனைவரையும் அழைக்கின்றோம்.

வணக்கம்

நிர்வாக சபை,
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.

345, கோயில் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

(சி/10011)

# கடந்த வாரம் பெய்த மழையால் 142 ஹெக்டேயரில் நெற்பயிர் அழிவு

யாழ்ப்பாணம், நவ. 28

கடந்த வாரம் பெய்த மழையினால் யாழ். மாவட்டத்தில் 142 ஹெக்டேயர் பரப்பில் நெற்பயிர்கள் மழை வெள்ளத்தினால் அழிந்துள்ளதாக விவசாயத் திணைக்கள புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

இந்த மழையினால் கரவெட்டியில் 4 ஹெக்டேயரிலும், சாவகச்சேரியில் 124 ஹெக்டேயரிலும், சங்கானையில் 8 ஹெக்டேயரிலும், உடுவிலில் 6 ஹெக்டேயரிலும் நெற்பயிர்கள் அழிந்துள்ளன.

இதேவேளை —

கடந்த மாதம் பெய்த மழையினால் அழிந்து போன 492 ஹெக்டேயர் நெற்பயிரில் 350 ஹெக்டேயர் நிலத்தில் மீள்நடுகை செய்யப்பட்டுள்ளதாகவும் அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

[ஐ-5-9-17]

## நாவலர் குருபூசை நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், நவ. 28

யாழ்ப்பாணம் இந்து சமயப் பேரவையின் ஏற்பாட்டில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் குருபூசை விழா நாளை திங்கட்கிழமை நடைபெறும்.

அன்றைய தினம் நண்பகல் 12 30 மணிக்கு இணுவில் ஸ்ரீ கந்தசாமி கோயிலில் ஆறுமுக நாவலர் குருபூசையும், தொடர்ந்து பிற்பகல் 2 மணிக்கு இணுவில் மத்திய கல்லூரியில் யாழ்ப்பாணம் இந்து சமயப் பேரவைத் தலைவர் அருட்கவி சீ. விநாசித்தம்பி தலைமையில் விழாவும் நடைபெறும்.

இந்த நிகழ்வில் சிறப்புரை மற்றும் கலைநிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

[க]

★ ★ ★

யாழ். சைவ பரிபாலன சபையினர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரின் 120 ஆவது குருபூசை தினத்தை முன்னிட்டு பாடசாலை மாணவர்களிடையே நடத்திய பேச்சுப் போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பு வைபவமும் நாவலர் குருபூசை நிகழ்வும் நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்கு நீராவியடியில் உள்ள நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சைவபரிபாலன சபையின் உப தலைவர் சைவப்புலவர் வ. கந்தசாமி தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் அருளுரையை நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள் வழங்குவார்.

யாழ். இந்துக் கல்லூரி அதிபர் அ. சிறிக்குமரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு பதக்கங்களையும் பரிசில்களையும் வழங்குவார். யாழ். இந்து மகளிர் கல்லூரியின் இளைப்பாறிய ஆசிரியை செல்வி புஷ்பா செல்வநாயகம் வழங்கும் ''செயற்கரிய செய்தவர்'' என்ற தலைப்பிலான சமயச் சொற்பொழிவு இந்த நிகழ்வில் சிறப்பு நிகழ்ச்சியாக இடம்பெறும். (உ-7)

## கிணற்றில் தவறி விழுந்து பலி

தென்மராட்சி, நவ. 28

மழை வெள்ளத்தில் மூடப்பட்டிருந்த கிணற்றில் வயல் வேலை முடிந்து வீடு திரும்பிய குடும்பஸ்தர் தவறி வீழ்ந்து பலியானார்.

இச்சம்பவம் கடந்த வாரம் கைதடி வடக்கில் இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த முருகன் சடையன் [வயது 48] என்பவரே மரணமானவராவார்.

சாவகச்சேரி நீதிமன்ற நீதிவான் சம்பவம் நடந்த இடத்துக்குச் சென்று விசாரணை நடத்தினார்.

இவ் வருடம் கைதடிப்பகுதியில் பன்னிரண்டுக்கு மேற்பட்டோர் பாதுகாப்பற்ற கிணறுகளில் வீழ்ந்து பலியாகியுள்ளதாக மருத்துவ வட்டாரங்களில் இருந்து அறிய வருகிறது. [ஐ-117]

## சுயதொழில் முயற்சிகளை மேம்படுத்தப் பயிற்சித் திட்டம்

யாழ்ப்பாணம், நவ. 28

யாழ். மாவட்டத்தில் சிறுதொழில், சுயதொழில் முயற்சிகளை மேம்படுத்துவதற்கான பயிற்சித் திட்டம் மாவட்ட செயலகத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

இத் திட்டத்தில் இணைந்து கொள்வதற்கு விண்ணப்பித்தவர்களில் முதற் கட்டமாக 154 பேர் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்குப் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

ஆறு பிரிவுகளாக வகுக்கப்பட்ட இந்தப் பயிற்சி நெறிகளில் இரண்டுகட்டப் பயிற்சிகள் நிறைவு பெற்றுள்ளதுடன் மூன்றாவது பயிற்சி யாழ். சிற்றி ஹோலில் கடந்த 23 ஆம் திகதி தொடக்கம் நடைபெற்று வருகிறது.

நான்காவது பயிற்சி நெறி டிசெம்பர் முதலாம் திகதி தொடக்கம் 5 ஆம் திகதி வரை சங்கானை பிரதேச செயலர் பிரிவில் நடத்தப்படவுள்ளது.

இந்தப் பயிற்சி நெறிகளில் செயற்றிட்டம், முகாமைத்துவம், சந்தைப்படுத்தல், வளங்களையும் செயற்றிட்டங்களையும் அடையாளம் காணல் போன்ற விடயங்கள் தொடர்பாக விளக்கமளிக்கப்படுவதுடன் களப் பயிற்சியும் வழங்கப்படுகிறது.

மேற்படி பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்தவர்கள் வங்கிக் கடனை இலகுவாகப் பெற்று தொழில் முயற்சிகளை ஆரம்பிக்க முடியும் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-5)

## முன்பள்ளிகள் புனரமைப்பு

வலி. கிழக்கு, நவ 28

யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பிரிவில் நாவாந்துறைப் பகுதியில் உள்ள இரு முன்பள்ளிகள் 'யுனிசெவ்' நிறுவனத்தினால் ஒரு லட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டு வருகின்றன —

நாவாந்துறை சென். மேரிஸ் பாலர் பாடசாலை, கண்ணாபுலம் பாலர் பாடசாலை என்பனவே தலா 50 ஆயிரம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டு வேலைகள் யாவும் பூர்த்தியாகும் தருவாயில் உள்ளதாக பிரதேச செயலர் தெரிவித்தார்.

(ஐ-180)

## வயலில் நாற்றுப் பிடுங்கியவர் துரத்திப் பிடிக்கப்பட்டார்

தென்மராட்சி, நவ. 28

இருள் சூழ்ந்த வேளையில் நெல்வயல்களில் நெல் நாற்றுக்களைக் களவாகப் பிடுங்கி விற்பனை செய்து வந்த நபர் ஒருவர் கடந்த வாரம் சாவகச்சேரி சிவன்கோவிலடி வயலில் நாற்றுக்கள் பிடுங்கிக் கொண்டிருந்த வேளை வயல் சொந்தக்காரரால் துரத்திப் பிடிக்கப்பட்டார்,

இவருடன் நாற்றுக்கள் பிடுங்கிக்கொண்டிருந்த மற்றொருவர் தப்பியோடிவிட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

சாவகச்சேரி கெருடாவிலைச் சேர்ந்த சுப்பிரமணியம் செல்வராசா என்பவரே நெல் நாற்றுக்கள் பிடுங்கியவரெனச் சாவகச்சேரிப் பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

(ஐ-117)

## எம். எஸ். எவ். டாக்டர்கள் மடுவில் மருத்துவப்பணி

மடுத்தேவாலயத்தில் அகதிகள் எண்ணிக்கை அதிகரித்து வருவதை அடுத்து எம். எஸ். எவ். என்ற பிரான்ஸ் வைத்தியக் குழு தனது பணியை அங்கு ஆரம்பிக்க முடிவு செய்துள்ளது.

கடந்த புதன்கிழமை அங்கு சென்ற எம. எஸ். எவ். குழுவின் அதிகாரிகள் வைத்திய சிகிச்சைப் பணிகளை மேற்கொண்டனர்.

மடுவில் தற்சமயம் தங்கியுள்ள மன்னார் ஆயர் அதிவண. ராயப்பு ஜோசெப்பின் அழைப்பின் பேரில் தமது வைத்திய அதிகாரிகள் அங்கு சென்றனர் என்றும் —

தமது வைத்தியர்களின் சேவை தொடர்ந்து தேவைப்படும் பட்சத்தில் அங்கு அலுவலகம் ஒன்றை மீண்டும் திறப்போம் என்றும்—

அந்த அமைப்பின் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார்.

(உ-3)

## கொல்களம் அமைக்கப்படும்

வலி.கிழக்கு, நவ. 28

நல்லூர் பிரதேச சபையின் கொக்குவில் உபஅலுவலகத்தில் இறைச்சிக்காக கால்நடைகளை வெட்டும் கொல்களம் ஒன்று 4 லட்சத்து 50 ஆயிரம் ரூபா செலவில் நவீன வசதியுடன் அமைக்கப்படவுள்ளது.

பிரதேச சபையின் நிதி மூலம் இவ் வேலைத்திட்டம் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக பிரதேச சபை செயலாளர் தெரிவித்தார்.

[ஐ 180]

## சமுர்த்திக் குழுக்களை அமைக்குமாறு பணிப்பு

வலி. வடக்கு, நவ. 28

கிராம அலுவலர் ரீதியான சமுர்த்திக் குழுக்களை விரைவாக அமைத்து முடிக்கும்படி சமுர்த்தி விவகார அமைச்சினால் பிரதேச செயலாளர்கள், உதவி அரசாங்க அதிபர்கள் கேட்கப்பட்டுள்ளனர்.

இது சம்பந்தமான சுற்றறிக்கை பிரதேச செயலகங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

இந்த புதிய சுற்றறிக்கையின் பிரகாரம் ஒவ்வொரு சமுர்த்தி செயலணிக் குழுவிலும் 18 க்கும் 35 க்கும் இடைப்பட்ட வயதுடைய ஏழு பேர் இடம்பெற வேண்டும எனவும் அதில் மூவர் கட்டாயமாக பெண்களாக இருக்க வேண்டும் எனவும் பணிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் கிராம அலுவலர் பிரிவு மட்டத்தில் இயங்குகின்ற அரச சார்பற்ற நிறுவனங்களின் தலைவர்களும் இந்தக் குழுவில் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டுமெனவும் கூறப்பட்டுள்ளது.

(இ-86)

## தாய்மாருக்கு போஷாக்கு உணவு

வலி. கிழக்கு. நவ. 28

நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட நான்கு தாய், சேய் நிலையங்களில் கர்ப்பிணித்தாய்மார், பாலூட்டும் தாய்மார்களுக்கான போஷாக்கு உணவு வழங்கப்பட்டு வருகின்றது.

சுகாதாரப் பிரிவினரால் போஷாக்கு குன்றியதாக இனங்காணப்பட்ட கர்ப்பிணித்தாய்மார், பாலூட்டும் தாய்மார். குழந்தைகளுக்கே இந்த போஷாக்குணவு வழங்கப்பட்டு வருவதாக பிரதேச சபை செயலாளர் தெரிவித்தார்.

(ஐ - 180)

## பாவனைக் காலம் கடந்த இனிப்பு வகைகள் விற்பனை

வலிகாமம் மேற்கு நவ. 28

சித்தன்கேணி, வட்டுக்கோட்டை, மாவடி ஆகிய இடங்களிலுள்ள வியாபார நிலையங்களில் பாவனைக் காலம் கடந்த சொக்லேட் ரொபி, சூயிங்கம், பபிள்கம் போன்ற இனிப்பு வகைகள் விற்பனை செய்யப்படுவதாக கூறப்படுகிறது.

அண்மையில் சித்தன்கேணியிலுள்ள வியாபார நிலையம் ஒன்றில் மாணவன் ஒருவர் வாங்கியசொக்லேட்டில் புழுக்கள் காணப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

இப் பகுதிகளிலுள்ள வியாபார நிலையங்களுக்கு சுகாதாரப் பரிசோதகர்கள் திடீர் சோதனையை மேற்கொண்டு பாவனைக் காலம் கடந்த இனிப்பு வகைகளை அழிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கோரப்பட்டுள்ளது.

(இ-175)

## சாரணர் கூட்டம்

யாழ்ப்பாணம், நவ: 28

யாழ். மாவட்டச் சாரணர் கிளைச் சங்க ஆதரவில் குருளைச் சாரணத் தலைவர்கள் மற்றும் சாரணத் தலைவர்களுக்கான கூட்டம் நாளை திங்கட்கிழமை பிற்பகல் இரண்டு மணிக்கு யாழ். மத்திய கல்லூரியில் யாழ். மாவட்ட சாரண ஆணையாளர் தலைமையில் நடைபெறும்.

இந்தக் கூட்டத்தில் சகல உதவி மாவட்ட ஆணையாளர்களையும் குருளைச் சாரணத் தலைவர்களையும், சாரணத் தலைவர்களையும் கலந்து கொள்ளுமாறு சங்கத்தின் செயலாளர் கேட்டுள்ளார். (ஐ-க)

## பாவனைக்குதவாத இறைச்சி உரும்பிராயில் கண்டுபிடிப்பு

வலி. கிழக்கு, நவ. 28

உரும்பிராய்ப் பகுதியில் மாட்டிறைச்சிக்கடை ஒன்றில் பாவனைக்குதவாத இறைச்சி விற்பனை செய்யப்பட்டது பொது சுகாதாரப் பரிசோதகரால் கண்டு பிடிக்கப்பட்டு இறைச்சி பறிமுதல் செய்யப்பட்டு அழிக்கப்பட்டது.

உரும்பிராய்ப் பகுதியில் கடந்த 23 ஆம் திகதி நீர்வேலிப் பகுதி பொதுச் சுகாதாரப் பரிசோதகர் கே. ரி. தயாளன் நடத்திய திடீர் பரிசோதனையின் போதே முதல்நாள் பாவனைக்கென கொல்லப்பட்ட மாட்டின் இறைச்சி மறுநாள் விற்பனை செய்வது கண்டுபிடிக்கப்பட்டது.

பாவனைக்குதவாத சுமார் 35 கிலோ இறைச்சி அழிக்கப்பட்டதுடன் இது போன்று சுகாதார விதிகளை மீறிச் செயற்படவேண்டாமென கடை உரிமையாளர் எச்சரிக்கை செய்யப்பட்டார்.

[ஐ-180]

## பாராட்டுவிழா

நவாலி, நவ. 28

மானிப்பாய் ப. நோ. கூ சங்கத்தில்விற்பனை முகாமையாளராக கடந்த 32 வருடங்கள் சேவையாற்றி ஓய்வு பெற்றுச் செல்லும் தா. செல்வராசாவுக்கு பாராட்டு விழாவும் பிரிவுபசாரமும் அண்மையில் நடத்தப்பட்டன.

ப.நோ.கூ சங்கத் தலைவர் திருமதி இ. லோகநாதன் தலைமையில் சங்க மண்டபத்தில் இடம் பெற்ற இவ் வைபவத்தில் ஊழியர்கள் கிளை முகாமையாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டுபாராட்டுரை வழங்கினார்கள். [இ-100]

## தேங்காய் விலை மிகவும் வீழ்ச்சி

தென்மராட்சி, நவ. 28

சாவகச்சேரி சந்தையில் தேங்காய் விலை என்றுமில்லாதவாறு வீழ்ச்சியடைந்துள்ளது.

பத்துரூபா முதல் பதினைந்து ரூபா வரை விற்கப்பட்ட பெரிய தேங்காய் ஐந்து ரூபாவாகவும், சிறிய தேங்காய் இரண்டு ரூபாவாகவும் நேற்று முன்தினம் விற்கப்பட்டது.

தென்மராட்சிப் பிரதேசத்திலிருந்தும், பளைப் பிரதேசத்திலிருந்தும் நாளாந்தம் 5 ஆயிரத்திற்கு மேற்பட்ட தேங்காய்கள் சந்தைக்கு கொண்டுவரப்படுவதால் விலை வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-117)

## தற்போதைய ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிக்கப்படும்

### ஐ. ஐ. மு. வேட்பாளர் கூறுகிறார்

கொழும்பு, நவ. 28

''ஜனாதிபதித் தேர்தலில் தெரிவு செய்யப்பட்டால் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை ஒழித்துக்கட்டி நாடாளுமன்றத்துக்கு கூடுதல் அதிகாரம் அளிக்கக் கூடிய சட்டங்களைக் கொண்டு வருவேன்.''

இவ்வாறு ஜனநாயக ஐக்கிய முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் ஆரியவன்ஸ திசநாயக்க தெரிவித்துள்ளார்.

மகரகமவில் உள்ள தமது கட்சி அலுவலகத்தில் அரசியல் குழு, நிர்வாகக்குழு ஆகியவற்றின் உறுப்பினர்களைச் சந்தித்து உரையாற்றும் போதே மேற்கண்டவாறு அவர் கூறினார்.

உள்ளூர முதலாளி வர்க்கத்தை உருவாக்கக் கூடிய தற்போதைய அமைப்புக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படும் என்றும் —

தேசிய வளங்கள் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு விற்பனை செய்யப்படுகின்றன என்றும் —

அதனை நிறுத்தப்போவதாகவும் —

தமது பிரசாரங்களை விளம்பரங்கள் கொடிகள், அலங்காரங்கள் ஆகியன இல்லாமல் நடத்தப் போவதாகவும் — அவர் மேலும் கூறினார்.

(இ-க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விற்பனைக்கு

எமது சங்கத்தில் பழுதடைந்த ஆழ்குளிரூட்டி விற்பனைக்கு உண்டு. [5' x 2' x 3'] அளவுள்ள மொடல் DC 50 டென்மார்க்) தேவையானவர்கள் 04 – 12 – 1999 ஆம் திகதிக்கு முன் அலுவலக நேரத்தில் பார்வையிட்டு கூறுவிலையினைச் சமர்ப்பிக்கவும்.

பொது முகாமையாளர்

**யாழ். மாவட்ட**

**அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்,**

கலாசாலை வீதி,
திருநெல்வேலி கிழக்கு.
கோப்பாய். (சி/9998)



**லங்கா சித்த ஆயுர்வேத மருத்துவக் கல்லூரி**

யாழ்ப்பாணம்

# அனுமதி - 2000

தகைமை—

க. பொ. த. (உயர்தர) பரீட்சையிற் சித்தி. வைத்திய பரம்பரையைச் சேர்ந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**விண்ணப்பங்கள் 31–12–99 வரை ஏற்றுக்கொள்ளப்படும்.**

விண்ணப்பப் படிவங்களை நேரிலோ அல்லது தபால் மூலமோ ரூபா 20 செலுத்திப் பெறலாம். வேறு மாவட்டங்களைச் சேர்ந்த விண்ணப்பதாரிகள் சுய விவரங்களைக் குறிப்பிட்டு நேரடியாக விண்ணப்பிக்கலாம்.

**– பதிவாளர்,**

லங்கா சித்த ஆயுர்வேத மருத்துவக் கல்லூரி,
127, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (71275)



**யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்றம்**

# வரவு-செலவுத் திட்டம் - 2000

2000 ஆம் ஆண்டுக்குக் கிடைக்கக் கூடிய மாநகர வருமான மதிப்பீட்டையும் உத்தேச செலவீன விவரங்களையும் உள்ளடக்கிய யாழ்ப்பாண மாநகராட்சி மன்றத்தின் வரவு செலவுத் திட்டம் 1999 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 28ஆம் திகதி தொடக்கம் ஏழு நாள்களுக்கு யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற அலுவலகத்தில் பொது மக்கள் பார்வைக்கு வைக்கப்படுமென மாநகராட்சி மன்றங்கள் கட்டளைச் சட்டத்தின் (அத்தி. 252), (212), (பி) பிரிவின் பிரகாரம் இத்தால் அறிவித்தல் தரப்படுகின்றது.

எஸ். எம். பொன்னம்பலம்
பதில் மாநகர ஆணையாளர்
மாநகர சபை, யாழ்ப்பாணம்

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
25 – 11 – 1999 (சி/9987)


## 45 ஆம் நாள் நினைவலைகள்



**அமரர் இராமலிங்கம் சத்தியதாசன்**

(ஓய்வு பெற்ற பொலீஸ் ஊழியர்)

மலர்வு: 07-07-1923 உதிர்வு: 15-10-1999

கண்ணைக் குளமாக்கி விட்டவரே
எண்ணும் பொழுதெல்லாம் துயரமே.
மண்ணில் மறைந்தும் மனதில் நிறைந்துள்ளீர்
விண்ணில் பேரின்பம் உமக்கமைவதாக.

உமது பிரிவால் துயருறும்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
அன்புத் தம்பி குடும்பத்தினர்,
பெறாமகள் குடும்பத்தினர்,
உற்றார், உறவினர்கள்.

தகவல்:
R. குணரட்ணம் (தம்பி)
சென்மேரிஸ் லேன்,
பண்டத்தரிப்பு. (71257)


**வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை, கரவெட்டி**

# கேள்வி அறிவித்தல்

கேள்விப் பத்திரம் வழங்கல் 02 – 12 – 99 நண்பகல் 12.00 மணி வரை
கேள்வி ஏற்றுக் கொள்ளல் 03 – 12 – 99 முற்பகல் 10.00 மணி வரை
கேள்வி திறத்தல் 03 – 12 – 99 முற்பகல் 11-00 மணிக்கு

கேள்விப் பத்திரங்களையும் மேலதிக விவரங்களையும் தலைமை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

| வேலை விவரம் | கேள்விப் பத்திரப்பணம் | கேள்வி வைப்பு |
|---|---|---|
| 1. கரம்பாவெளி வீதி | ரூபா 150 | ரூபா 250 |

சி. பசுபதி
செயலாளர்

23 – 11 – 99. (சி/9989)



**வலிகாமம் தெற்கு பிரதேச சபை**

**2000 ஆம் ஆண்டுக்கான**

# மீள்கேள்வி அறிவித்தல்

1999-11-14 ஆம் திகதிய உதயன் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கேள்வி நிபந்தனைக்கு அமைய பின்வரும் சந்தை, இறைச்சிக் கடைகள், கடைகள் ஆகியவற்றின் குத்தகைக்கான கேள்விகள் 2000 – 01 – 01 ஆம் திகதி தொடக்கம் 2000–12–31 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்கு மீளவும் கோரப்படுகின்றன.

அட்டவணை

| குத்தகை விவரம் | மாதவாடகை | கேள்விப் பத்திரப் பணம் | கேள்வி வைப்புப் பணம் | ஆகக் குறைந்த மதிப்பீடு தொகை |
|---|---|---|---|---|
| **சுன்னாகம் உபஅலுவலகம்** | | | | |
| 1. சுன்னாகம் மாட்டிறைச்சிக்கடை | 100/- | 200/- | 2000/- | 330000/- |
| 2. கருவாட்டுக் கடை இல. 7 | 60/- | 50/- | 100/- | 3300/- |
| **உடுவில் உபஅலுவலகம்** | | | | |
| 1. மருதனார்மடம் சந்தை | —— | 500/- | 5000/- | 1650000/- |
| 2. இணுவில் சந்தை ஆட்டிறைச்சிக் கடை | 100/- | 150/- | 1500/- | 30000/- |
| 3. தாவடி ஆட்டிறைச்சிக் கடை | —— | 150/- | 1500/- | 60000/- |
| **ஏழாலை உபஅலுவலகம்** | | | | |
| மயிலங்காடு மாட்டிறைச்சிக் கடை | —— | 150/- | 1500/- | 72000/- |

கேள்விப் பத்திரங்கள் வழங்கப்படும் இறுதித் திகதி — 1999–12-08 பி. ப. 3.00 மணி
கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதி — 1999–12–09 பி. ப. 2.00 மணி
கேள்விகள் திறக்கப்படும் திகதி — 1999–12–09 பி. ப. 3.00 மணி

ஆகக்குறைந்த கேள்வித் தொகையிலும் குறைவான தொகை கோரப்படின் கேள்விகள் நிராகரிக்கப்படும்.

தி. மா. செல்வராசா, ஜே. பி. யு. எம்,
தலைவர்.

வலிதெற்கு பிரதேச சபை,
சுன்னாகம். 1999—11—24 (சி/9993)



# கேள்வி அறிவித்தல்

**பிரதம எந்திரி அலுவலகம் - கட்டடங்கள் திணைக்களம்,**

**யாழ்ப்பாணம் (மாகாணம்)**

கீழ்வரும் வேலைக்கான கேள்விகள், யாழ்ப்பாணம், கட்டடங்கள் திணைக்களத்தினரால் நியமிக்கப்பட்ட கேள்விச் சபையினரால் 1999 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 15 ஆம் திகதி முற்பகல் 10.30 மணிவரை யாழ்ப்பாணம் பிரதம எந்திரி அலுவலகம் கட்டடங்கள் திணைக்களத்தில் ஏற்றுக்கொள்ளப்படும். பெறப்பட்ட கேள்விகள் எமது அலுவலகத்தில் உடனடியாகத் திறக்கப்படும்.

நிர்மாணப் பயிற்சி நிறுவனத்தில் (இக்ராட்) கட்டடம் நிர்மாணிப்பதற்கு தரம் எம் — 8 இலும் அல்லது அதற்கு மேல் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்கள் கேள்விப் பத்திரம் கோருவதற்குத் தகுதியுடையோராவர்.

ஒப்பந்தப் பத்திரங்களைப் பெறுவதற்கு முன்னர் நிர்மாணப் பயிற்சி நிறுவனத்தினரால் (இக்ராட்) வழங்கப்பட்டதும் இற்றைவரை செய்யப்பட்ட வேலைகளின் விவரங்களடங்கியதுமான பதிவுப் புத்தகத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

தகுதியுடையோர் உரிய கேள்வி வைப்புப் பணத்தை யாழ்ப்பாணம் கடற்கரை வீதியில் அமைந்துள்ள கட்டடங்கள் திணைக்கள நிறைவேற்று எந்திரி அலுவலகத்தில் செலுத்திப் பற்றுச் சீட்டைப் பெற்று கேள்விப் பத்திரத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

| வேலை விவரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்வி வைப்புப் பணம் |
|---|---|---|
| 1. நெல்லியடி சந்தை விஸ்தரிப்பு கட்டடம் 1 | 20,000/- | 500/- |

கேள்விப் பத்திரங்களை 1999 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 10ஆம் திகதி பிற்பகல் 4.45 மணிவரை யாழ்ப்பாணம், கட்டடங்கள் திணைக்கள நிறைவேற்று எந்திரியிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

இவை தொடர்பான மேலதிக விவரங்களை நிறைவேற்று எந்திரி கட்டடங்கள் திணைக்களம், யாழ்ப்பாணம் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம். மேலும் கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பரீட்சிக்கலாம்.

எந்திரி ந. சுந்தரமூர்த்தி,
பிரதம எந்திரி
கட்டடங்கள் திணைக்களம்,
யாழ்ப்பாணம்.

பிரதம எந்திரி அலுவலகம்,
கட்டடங்கள் திணைக்களம்,
கடற்கரை வீதி, யாழ்ப்பாணம். (சி/9984)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஓராண்டு நினைவஞ்சலி



### திருமதி சின்னத்தம்பி கனகம்மா

தாய் மடியில் 14-05-1926 — இறைவனடியில் 08-12-1998

கண் இமைக்கும் நேரத்தில் பிரிந்ததம்மா உங்கள் உயிர்
காலம் முழுவதும் வருந்துகின்றோம் உங்கள் பிரிவால்

என்றும் உங்கள் நினைவில் இருக்கும்
பிள்ளைகள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

முருகன் இரும்புத்தொழிற்சாலை.
அன்ட் மணப்பந்தல் உரிமையாளர்:-
அன்பு மகன் சி. முருகமூர்த்தி, மயில்வாகனம்,

கண்டிவீதி,
மீசாலை.

[71309]

## ஏமாற்றியவர்கள் சிக்கினர்

வேலணை, நவ. 28

ஆலயங்களின் பெயரினைக் கூறியும், ஊனமுற்றோர். அநாதைகளின் ஆதரவிற்காக நிதி திரட்டுவதாகப் பொய் கூறியும் பொதுமக்களிடமிருந்து பணம், நகை என்பனவற்றினை ஏமாற்றிப் பெற்ற இரு ஏமாற்றுப் பேர்வழிகள் பொதுமக்களால் கையும் மெய்யுமாகப் பிடிக்கப்பட்டு நையப்புடைக்கப்பட்டனர்.

இச்சம்பவம் வேலணை துறையூரில் கடந்த புதனன்று பிற்பகல் 2.30 மணிக்கு இடம்பெற்றது

பனிப்புலம், சங்கானையினை வதிவிடமாகக் கொண்ட இருவரேபிடிபட்டவர்களாவர்.

பொதுமக்களால் பிடிக்கப்பட்ட இவ்விருவரும் அருகிலுள்ள ஈ பி. டி. பி அரசியல் செயலகத்தில் ஒப்படைக்கப்பட்டனர். [ஐ - 167]


## மலிவு விலையில்

பல வர்ணங்களில்

வோஸ்பேசின். கொமோட்
ஸ்கொட்டிங்பான், K சிங்,
Lab சிங், ஸ்ரீல் சிங்
வகைகள் மொத்தமாகவும்
சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ள

### புதிய விமாகி

27/3. மின்சார நிலைய வீதி.
யாழ்ப்பாணம்.
(பஸ்தரிப்புக்கு முன்பாக)

(70568)



## டினுஸ் பந்தல் சேவை

உங்கள் இல்லங்களில் நடைபெறும்
அனைத்து வைபவங்களுக்கும் தேவையான

சொக்கட்டான் பந்தல், தகரப் பந்தல், சைவ மணவறை
கிறிஸ்ரியன் மணவறை. பிளாஸ்ரிக் / குஷன்
இரும்புக் கதிரைகள், சிங்கப்பூர் சோடினைகள்,
பிளாஸ்ரிக் சோடினைகள். பெரிய சமையல் பாத்திரங்கள்,
சில்வர் பீங்கான்கள். மாபிள் பீங்கான்கள்,
சில்வர் ரமிளர், சில்வர் கறிவாளி. தண்ணீர் பொல்கள்,
றிங்ஸ்வாளிகள், ஐஸ்கிறீம் கப், கரண்டிகள், ட்றேகள்,
தண்ணீர் கோப்பைகள் பாய்கள், தளப்பாய்
மற்றும்
திருமண வைபவங்களுக்குத் தேவையான
அனைத்துப் பொருள்களும்
ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

நீங்கள் தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:

### டினுஸ் பந்தல் சேவை

இல. 3, கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்.
T. P. 2321

★ விவரம்: மாநகரசபை பெரிய தண்ணீர்த் தாங்கி மடத்தடி மகப்பேற்று நிலையத்துக்கு முன்பாக.

செ. பி. சேவியர் (அரியராசா)
- உரிமையாளர்

(71312)


## வலயக் கல்வித் திணைக்களம் - வடமராட்சி வலயம்

## கேள்வி அறிவித்தல்

கீழே குறிப்பிடப்பட்டுள்ள வேலைக்கான கேள்விகள், வடமராட்சி வலயக் கல்வித் திணைக்களத்தின் கேள்விச் சபைத் தலைவரால் 1999 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 09 ஆம் திகதி முற்பகல் 10.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்பட்டு அன்றைய தினமே முற்பகல் 10. 30 மணிக்குத் திறக்கப்படும். அச்சமயம் விரும்பும் கேள்விதாரர் அல்லது அவரால் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி சமுகமளிக்கலாம்.

| இல. | பாடசாலைப் பெயரும் வேலை விவரமும் | மீளளிக்கப் படாத வைப்புப் பணம் | மீளளிக்கப் படும் வைப்புப் பணம் |
|---|---|---|---|
| 01. | யா/நெல்லியடி ம. ம. வி. மலசல கூடம் அமைத்தல். | 250/- | 1500/- |

01. மேற்படி வேலைகளுக்கு இக்ராட் (ஐசீரிஏடி) நிறுவனத்தின் தரம் எம் 09- ம் அதற்கு மேற்பட்ட தரத்திற்குப் பதிவு செய்து கொண்டவர்கள் விண்ணப்பிக்கத் தகுதி பெற்றவர்கள்.
02. கேள்விப் பத்திரங்கள், பொருள்கள் சேவை வரி(ஜீ. எஸ். ரி.) சேர்க்கப்பட்ட கேள்வித்தொகை, பொருள்கள் சேவை வரி(ஜீ. எஸ். ரி.) சேர்க்கப்படாத கேள்வித் தொகை என்பன தனித்தனியாகக் குறிப்பிடப்பட வேண்டும்.
03. வேலைகளுக்கு அமைவாக மேற்கொள்ளப்பட்ட கேள்விப்பணத்தை வடமராட்சி வலயக் கல்வித் திணைக்களத்தின் வலயக் கல்விப் பணிப்பாளரின் வங்கிக் கணக்கில் வைப்புச் செய்து கேள்விப் பத்திரங்களை 29-11-99 ஆம் திகதியிலிருந்து 03-12-99 ஆம் திகதி நண்பகல் 12 00 மணி வரை வடமராட்சி வலயக் கல்வித்திணைக்களம் பாடசாலைக் கட்டட வேலைகள் கிளையிற் பாடசாலைக் கட்டட பரிசோதகரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.
04. விண்ணப்பங்கள் யாவும் இரு பிரதிகளில் பூர்த்தி செய்யப்பட்டு மூலப்பிரதியும் இணைப்பிரதியும் தனித்தனி இரு கடித உறைகளில் இடப்பட்டுக் கடித உறைகளின் இடதுபுற மேற்பக்கத்தில் வேலையின் விவரமும் எழுதப்படல் வேண்டும். தனித் தனியே கடித உறைகளில் போடப்பட்டு இரு பிரதிகளையும் பிறிதொரு கடித உறையில் போட்டு ஒட்டப்பட்டு ஒப்பந்தகாரரின் முத்திரை இடப்பட்டு ''தலைவர் கேள்விச்சபை, வடமராட்சி வலயக் கல்வித் திணைக்களம், புலோலி.'' என விலாசமிடப்பட்டு வடமராட்சி வலயக் கல்வித் திணைக்களத்தில் வலயக் கல்விப்பணிப்பாளரின் அலுவலக அறையினுள் வைக்கப்பட்டு கேள்விப் பத்திரப் பெட்டியில் 09-12-99 ஆம் திகதி முற்பகல் 10.00 மணிக்கு முன்னர் இடப்படல் வேண்டும். மேற்குறிப்பிட்ட காலநேரத்திற்கும் பிந்திய கேள்விப்பத்திரங்கள் எக்காரணங் கொண்டும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
05. தெரிவு செய்யப்படும் ஒப்பந்தகாரர், தெரிவு செய்யப்படும் திகதியிலிருந்து 01 மாத காலத்திற்குள் வேலைகளை பூர்த்திப் செய்து கையளித்தல் வேண்டும். எதுவித தாமதங்களும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. சரியாக நிரப்பப்படாத, பிழைகள் கூடிய தெளிவற்ற கேள்விப்பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.
06. கேள்வி ஆணைகளை இலவசமாகப் பார்வையிடுவதுடன் மேலதிக விவரங்களையும் பாடசாலைக் கட்டட வேலைகள் பரிசோதகரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம் எனவும் அறியத்தருகின்றோம்.

சி. சிவராஜா
வலயக் கல்விப் பணிப்பாளர்
வடமராட்சி.

பாடசாலைக் கட்டட வேலைகள் கிளை,
வடமராட்சி வலயக் கல்வித் திணைக்களம்,
புலோலி.
1999-11-23

(சி/9979)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
ஓம் ஸ்ரீ சாயிராம்

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

### சின்னத்தம்பி சரவணமுத்து

[ஓய்வுபெற்ற தலைமை ஆசிரியரும், ஆலயப் பிரசாரகரும்]

வையகத்தில் 14 - 12 - 1917 — தெய்வீகத்துள் 20 - 11 - 1997

**திதி: 28 - 11 - 1999 அபரபக்க சஷ்டி**

பொருளீட்டி வந்த புகழ் பூவுலகம் மட்டுமென்றால்
அருளீட்ட வாழ்ந்த சுகம் தெய்வீகம் ஆதமென்று
தெளிவான சிந்தையுடன் கற்றுவந்த செல்வம் எல்லாம்
வழிபாடு செய்வதற்கு வாய்த்த இதிகாசங்களாய்
கூட்டுப் பிரார்த்தனை கூட்டங்கள் கூட்டி வைத்து
பாட்டும் பயனும் பின் பாபாவின் போதனைகளும்
கூடி இருப்பவர்க்கு குழாங்களிலும் விழாக்களிலும்
வேடிக்கையாக விளங்க வைத்த தத்துவமே!
ஆண்டுகள் இரண்டு என்ன ஆயிரமே ஆயிடினும்
மாண்புமிகு உம் பெருமை எம் மனதைவிட்டு
அகன்றிடுமோ?
நீண்டிடும் நினைவு எல்லாம் கனவிலும் நினைவேயாக
மாண்டிட்டீர் இல்லை மாந்தர் தேவராய்
வாழுகின்றீர்

### புகழ்

சிற்பியுள் வந்த முத்து சிறந்த நல் ஆரம் என்றால்
கைதையூர் மத்தியில் வந்த முத்தின் கருத்ததே
அலங்காரமாகும்
வெற்பிடையூறும் ஊற்றில் தவழ்ந்திடும்
இரத்தினமேபோல்
முத்தியில் இன்றும் நீவிர் சரவணமுத்தாய்
விளங்குகின்றீர்


ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!
என்றென்றும் நீங்கள் காட்டிய சத்திய வழியில்
வாழ்ந்துகொண்டு இருக்கும்

அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

''குமாரபுரி'',
கைதடி வடக்கு, கைதடி.

(71304)

# மிருதங்க அரங்கேற்ற அழைப்பு



## செல்வன் கிருபா அனந்தகோபன்

இணுவையூர் திரு. திருமதி கிருபாகரமூர்த்தி தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரனும்
கலாபூஷணம் க. ப. சின்னராசா அவர்களின் மாணவனுமாகிய

**திருநிறை செல்வன் கிருபா அனந்தகோபனின்**

மிருதங்க அரங்கேற்றம் இணுவில் பரராஜசேகரப் பிள்ளையார் கோயில்
கல்யாண மண்டபத்தில் இன்று (28-11-99) ஞாயிற்றுக்கிழமை
பிற்பகல் 2.00 (பழைய நேரம்) மணியளவில்
மஹாவித்துவான் நா. வீரமணிஐயர் (M. A) அவர்கள் தலைமையில் நடைபெறும்.

ஆகவே எமது நண்பர்கள், உறவினர்கள் நலன்விரும்பிகள் யாவரையும்
அன்புடன் அழைக்கின்றோம்.

**கிருபாகரமூர்த்தி தம்பதிகள்**

மானிப்பாய் வீதி,
இணுவில் தெற்கு, இணுவில். (71199)

# கேள்வி அறிவித்தல்

## பிரதம எந்திரி அலுவலகம், கட்டடங்கள் திணைக்களம்,
யாழ்ப்பாணம் (மாகாணம்)

கீழ்வரும் வேலைகளுக்கான கேள்விகள், யாழ்ப்பாணம், கட்டடங்கள் திணைக்களத்தினரால் நியமிக்கப்பட்ட கேள்விச் சபையினரால் 1999 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 15 ஆம் திகதி முற்பகல் 10,30 மணிவரை யாழ்ப்பாணம் பிரதம எந்திரி அலுவலகம் கட்டடங்கள் திணைக்களத்தில் ஏற்றுக்கொள்ளப்படும். பெறப்பட்ட கேள்விகள் எமது அலுவலகத்தில் உடனடியாகத் திறக்கப்படும்.

நிர்மாணப் பயிற்சி நிறுவனத்தில் (இக்ராட்) கட்டடம் நிர்மாணிப்பதற்குத் தரம் எம் - 9 இலும் அல்லது அதற்கு மேல் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்கள் கேள்விப் பத்திரம் கோருவதற்குத் தகுதியுடையோராவர்.

ஒப்பந்தப் பத்திரங்களைப் பெறுவதற்கு முன்னர் நிர்மாணப் பயிற்சி நிறுவனத்தினரால் (இக்ராட்) வழங்கப்பட்டதும். இதுவரை செய்யப்பட்ட வேலைகளின் விவரங்களடங்கியதுமான பதிவுப் புத்தகத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

தகுதியுடையோர் உரிய கேள்வி வைப்புப் பணத்தை யாழ்ப்பாணம் கடற்கரை வீதியில் அமைந்துள்ள கட்டடங்கள் திணைக்கள நிறைவேற்று எந்திரி அலுவலகத்தில் செலுத்தி பற்றுச் சீட்டைப் பெற்று கேள்விப் பத்திரத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

| வேலை விவரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணம் | மீளளிக்கப்படாத கேள்வி வைப்புப்பணம் |
|---|---|---|
| 1. மருதங்கேணி வைத்தியசாலை பிரசவ அறையும், சிகிச்சைப் பிரிவும் திருத்தம். | 3,000/- | 250/- |
| 2. பளை வைத்தியசாலை நிர்வாக கட்டடக் கூரைத் திருத்த வேலை. | 1,000/- | 100/- |

கேள்விப் பத்திரங்களை 1999 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 10 ஆந் திகதி பிற்பகல் 4.45 மணிவரை யாழ்ப்பாணம், கட்டடங்கள் திணைக்கள நிறைவேற்று எந்திரியிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

இவை தொடர்பான மேலதிக விவரங்களை நிறைவேற்று எந்திரி, கட்டடங்கள் திணைக்களம், யாழ்ப்பாணம் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம். மேலும் கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பரீட்சிக்கலாம்.

**எந்திரி ந. சுந்தர மூர்த்தி**
பிரதம எந்திரி
கட்டடங்கள் திணைக்களம்,
யாழ்ப்பாணம்.

பிரதம எந்திரி அலுவலகம்,
கட்டடங்கள் திணைக்களம்,
கடற்கரை வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/9996)

# அனுமதிப் பத்திரம் இன்றி ஐஸ்பழம் விற்கத் தடை

பளைப் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உரிய அனுமதிப்பத்திரம் இன்றி வாகனங்களில் ஐஸ்கிறீம், ஐஸ்பழம் ஆகியவை விற்பனை செய்வது சுகாதாரப் பகுதியினரால் தடை செய்யபட்டுள்ளது

ஏனைய பிரதேசங்களிலிருந்து வாகனங்களில் ஐஸ்கிறீம், ஐஸ்பழம் ஆகியவை விற்பனைக்காகக் கொண்டு வருபவர்கள் அந்தந்தப் பிரதேசங்களில் உள்ள உள்ளூராட்சிசபையில் அனுமதிப் பத்திரம் பெறப்பட்டதை உறுதிப்படுத்திய சான்றிதழ் வைத்திருத்தல் வேண்டுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-117)

உ

# வாழ்த்துகிறோம்

இன்று மிருதங்க அரங்கேற்றம் காணும்
திருநிறை செல்வன்

## கிருபா அனந்தகோபன்

அவர்கள

கற்ற கலையிற் கடலெனப் புகழடைந்து
உற்ற நற்செல்வங்கள் உயர்வுறப் பெற்று
நற்றமிழ்க் கலைஞனாய் நானிலம் போற்ற
நீடூழி வாழ்க! என வாழ்த்துகிறோம்.

அன்புடன்
உரிமையாளர் த. குருபரன்
**சிறிகண்ணன் ஜுவலஹவுஸ்**

கே. கே. எஸ் றோட்,
கோண்டாவில். (71296)

# UNIVERSITY OF JAFFNA, SRI LANKA.

University of Jaffna will entertain applications from suitably qualified persons **Up to 31st December 1999 for the under-mentioned posts.**

### FACULTY OF ARTS

Senior Lecturer Gr. I / Senior Lecturer Gr. II / Lecturer (Probationary) in Linguistics / Sinhala * / English Literature / Music (Carnatic Vocal) / Music (Veena) / Dance (Bharathanatiyam) / Dance (Mirudangam) Christian and Islamic Civilization **.

* Preference will be given to those who have high proficiency in Tamil.

** Preference will be given to those who have knowledge of both Christian and Islamic civilizations.

### FACULTY OF MANAGEMENT STUDIES AND COMMERCE

Senior Lecturer Gr. I / Senior Lecturer Gr. II / Lecturer (Probationary) in Managemant Studies / Commerce.

### FACULTY OF AGRICULTURE

Senior Lecturer Gr. I / Senior Lecturer Gr. II / Lecturer (Probationary) in Agricultural Biology / Agricultural Economics.

### PHYSICAL EDUCATION UNIT

Instructress Grade III

| POSTS | SALARY SCALE |
|---|---|
| Senior Lecturer Grade I | Rs. 19,125- 8x475-22,925 p. m. |
| Senior Lecturer Grade II | Rs. 16,675- 5x475-19,050 p. m |
| Lecturer (Probationary) | Rs. 11,000-10x375-14,750 p. m. |
| Instructress Gr. III | Rs. 8,715- 6x185- 9.825 p m. |

In addition to the above salary, an academic allowance of 30% of the salary approved by the University Grants Commission will also be paid to the posts of Senior Lecturer Gr. I, Senior Lecturer Gr. II and Lecturer (Probationary).

Application forms and other details may be obtained from the Office of the Senior Assistant Registrar / Establishments, University of Jaffna, Sri Lanka either in person or by sending a Money Order for Rs. 20 per form. Those who wish to obtain application forms by post are requested to send a Money Order / Postal Order drawn in fevour of the "Bursar, University of Jaffna." together with a self-addressed stamped envelope 23x10 c.m in size.

Applicants from the University System / Government Departments / Corporations and Statutory Boards should channel their applications through the Heads of respective Institutions.

Applications received after the closing date will be rejected without intimation.

**REGISTRAR**

1999 - 11 - 23 (C/9983)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# HARVEST

## ஹாவஸ்ட்

### புதுச்சுவை குன்றாத தேநீர்

மலையகத்தின்
பசுமையான
தோட்டங்களிலிருந்து
வரும் ஹாவஸ்ட்
தேயிலை . . .

நறுமணமும்
புத்துணர்வும்
தந்திடும் தேநீரை
நீங்கள் பருக
நுட்பமாகக் கலவை
செய்யப்பட்டுள்ளது.




**100 கிறும் பக்கெட்டுகளில் கிடைக்கும்**

Marketed by
**Burns Philp Lanka (Pvt) Ltd.**
124, Templers Road, Mt. Lavinia.

Stockist in Jaffna
**Jeyarasa & Company**
104. A, Stanley Road, Jaffna.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(சி/9995)

# மேலும் 128 குடும்பங்களுக்கு 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவு

வலி. கிழக்கு, நவ. 28

நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் மீள் குடியமர்வுக் கொடுப்பனவான 5 ஆயிரம் ரூபா மேலும் 128 குடும்பங்களுக்கு வழங்கப்படவுள்ளது.

ஜே—94, ஜே—97, ஜே—99, ஜே—102, ஜே—110, ஜே—112, ஜே—119, ஜே—124, ஜே—125, ஜே—128 ஆகிய கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் வசிக்கும் 128 குடும்பங்களுக்கே இக்கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

உரியவர்கள் கிராம உத்தியோகத்தர்களுடன் தொடர்பு கொண்டு எதிர்வரும் 30 ஆம் திகதிக்குப் பின்னர் வங்கிகளில் பணத்தினைப் பெற்றுக் கொள்ள முடியும் என பிரதேச செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஐ-180)

## மூக்குக் கண்ணாடிகள்

வலி. வடக்கு. நவ. 28

வடக்கு - கிழக்கு மாகாண சமூக சேவைகள் அமைச்சினால் நல்லூர் பிரதேச செயலாளர் பகுதிக்கு 30 மூக்குக் கண்ணாடிகளும் ஒரு காது கேட்கும் கருவியும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

மேற்படி பொருள்களுக்கான பயனாளிகள், உரிய மருத்துவ சான்றிதழ்களுடன் ஏற்கனவே சமூக சேவைகள் அமைச்சுக்கு விண்ணப்பித்து இருந்ததைத் தொடர்ந்தே இப் பொருள்கள் கிடைக்கப் பெற்றுள்ளன.

குறிப்பிட்ட பொருள்களை பெற்றுக்கொள்ளும்படி விண்ணப்பதாரர்களுக்கு நல்லூர் பிரதேச செயலக சமூக சேவைப் பிரிவினர் அறிவித்துள்ளனர். (இ-86)

## கண் பரிசோதனை முகாம்

யாழ்ப்பாணம், நவ. 28

கொக்குவில் லயன்ஸ் கழகம் ஒழுங்கு செய்துள்ள இலவச மருத்துவ கண் பரிசோதனை இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு தாவடி காளி கோயிலடியில் இடம் பெறவுள்ளது.

யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர்களும், கொக்குவில் லயன்ஸ் கழக டாக்டரும் மருத்துவ பரிசோதனைகளை நடத்துவர்.

டாக்டர் லயன் எஸ். எஸ். அருளானந்தம் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (3-7)

## பதவி உயர்வுப் பரீட்சை

நவாலி, நவ. 28

அரசாங்க மற்றும் மாகாண அரசாங்க சேவையின் பொது எழுதுநர் சேவை மற்றும் அங்கீகரிக்கப்பட்ட வேறு சேவைகள் சிறாப்பர்சேவை, கணக்குப் பதியுநர் சேவை, பண்டசாலைக் காப்பாளர் சேவை மற்றும் தட்டெழுத்தாளர் சேவை ஆகியவற்றின் வகுப்பு 11 பிரிவு 'ஆ' வைச் சேர்ந்த அலுவலர்களை வகுப்பு 11 'அ' வுக்கு தரமுயர்த்துவதற்கான பரீட்சைக்கு பரீட்சை ஆணையாளரினால் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இப்பரீட்சை 2000 ஆண்டு பெப்ரவரி மாதம் நடத்தப்படுமென்றும் இதற்கான விண்ணப்ப முடிவு தினம் எதிர்வரும் டிசெம்பர் மாதம் 3ஆம் திகதி என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (இ - 100)


யாழ். மாநகர சபை

**கட்டாக்காலி நாய்களைப் பிடித்து அழித்தல்**

யாழ். மாநகர சபை எல்லைக்குட்பட்ட பகுதியில் கட்டாக்காலி நாய்களைப் பிடித்து அழிக்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

பிடிக்கப்படும் நாய்கள் எக்காரணம் கொண்டும் திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது.

ஆதலால் நாய் வளர்ப்பவர்கள் தமது வளர்ப்பு நாய்களை வீட்டில் கட்டி வைத்து வளர்க்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

சி. மா. பொன்னம்பலம்,
பதில் மாநகர ஆணையாளர்.

மாநகர சபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
26—11—1999. (சி/10001)



**Association for Health and Counselling**

**Annual General Meeting 1999**

The above Annual General Meeting will be held at 'Shanthiham', No. 15, Kachcheri - Nallur Road, Jaffna on December 11, 1999 at 2 P.M.

All members are requested to be present.

To be a member to participate in the Annual General Meeting, he/ she sbould have paid up his / her subscription up-to-date

Individual invitations have already been posted.

– President

(C/9990)


# பாடசாலைகளுக்கு அருகே ஆபாசப் பிரசுரங்களை விற்கத் தடை விதிப்பு

கொழும்பு, நவ. 28

பாடசாலைகளுக்கு அருகில் ஆபாசப்பட சஞ்சிகைகள், பத்திரிகைகள், பிரசுரங்கள் என்பனவற்றை விற்பனை செய்வதையும், ஆபாச விளம்பரங்களைக் காட்சிக்கு வைத்திருப்பதையும், அவற்றை மாணவர்களுக்கு விற்பனை செய்வதையும் அரசாங்கம் தடை செய்திருப்பதாக கல்வி உயர்கல்வி அமைச்சினால் சகல வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் அறிவிக்கப் பட்டுள்ளது.

பாடசாலை மாணவர்கள் மத்தியில் அண்மைக்காலமாக ஆபாசப் படங்களின் மோகம் அதிகரித்து வருவதுடன் அவர்களைத் தவறான வழியில் இழுக்கக் கூடிய பிரசுரங்கள் பாடசாலைக்கு அண்மையில் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளமையும் கல்வியமைச்சின் ஆய்விலிருந்து தெரியவந்துள்ளது.

சமூகத்தில் ஒழுக்கமுடையவர்களாகவும் கட்டுப்பாடுடையவர்களாகவும். வாழ வேண்டிய எதிர்காலச் சந்ததியினர்களான மாணவர்களை கெடுத்து விடக் கூடிய போதைப்பொருள் பாவனை மற்றும் தவறான நடத்தை போன்றவற்றிற்குத் துணை போகும் தகாதநட்பு என்பன மாணவர் மத்தியில் ஏற்பட்டுள்ளன.

இவ்வாறான தீயசெயல்களை முளையிலேயே கிள்ளி எறியவேண்டியது பாடசாலை அதிபர் மற்றும் ஆசிரியர்களின் கடமையாகும். தவறான நடத்தைகளால் ஏற்படும் பாதகங்கள் பற்றியும் அதனால் சமூகத்துக்கும் நாட்டுக்கும் ஏற்பட்டுவரும் களங்கம் பற்றியும் மாணவர்களுக்கு விசேட காலைக்கூட்டங்கள் விரிவுரைகள் மற்றும் கருத்தரங்குகள் நடத்தப்பட்டு தெளிவுபடுத்தப்படவேண்டும்.

அத்துடன் பாடசாலை மாணவர்கள் எந்த நேரத்திலும் சீருடையின்றி பாடசாலை இல்லாத நாள்களில் பாடசாலைக்குள் நுழைய அனுமதிக்கக் கூடாது என்றும் சுற்றறிக்கையில் அறிவிக்கப் பட்டுள்ளது. [ஐ-10]

# நாவலர் பேச்சுப் போட்டி வெற்றி பெற்றோர் விவரம்

யாழ்ப்பாணம், நவ. 28

யாழ். சைவபரிபாலனசபையினரால் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரின் குருபூசைத் தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட பேச்சுப்போட்டியின் முடிவுகள் வெளியிடப் பட்டுள்ளன.

மேற்படி போட்டியில் முறையே முதல் மூன்று இடங்களைப் பெற்று தங்கம், வெள்ளி, வெண்கலப் பதக்கங்களைப் பெறும் மாணவர்களின் பெயர் மற்றும் பாடசாலை விவரம் வருமாறு:-

### கீழ்ப்பிரிவு

க. தர்சனன் (யாழ்.இந்துக் கல்லூரி), சி. சிவாகுலன் [யாழ். மறவன்புலோ சகலகலாவல்லி வித்தி.) தி. காயத்திரி (கொக்குவில் இந்துக்கல்லூரி)

### மத்திய பிரிவு

பா. பிரணவன் (மகாஜனக் கல்லூரி), இ. அரவிந்தன் ஹாட்லிக் கல்லூரி), ச. லக்மன் (யூனியன் கல்லூரி)

### மேற்பிரிவு

நா. சுகந்தி (கொக்குவில் இந்துக்கல்லூரி), த. கேதாரன் (மானிப்பாய் இந்துக் கல்லூரி), ப. ரமேஷ் (ஹாட்லிக் கல்லூரி).

மேற்படி போட்டியில் குடாநாட்டில் உள்ள 80 பாடசாலைகளைச் சேர்ந்த 120 மாணவர்கள் பங்குபற்றினர். (உ-7)


**வாழ்த்துகின்றோம்**

◀▶◀▶◀▶◀▶*******◀▶◀▶◀▶◀▶

அகில இலங்கை சமாதான நீதிவானாகப் பதவியேற்றுள்ள

**LION டாக்டர் எஸ். எஸ். அருளானந்தம்** (சாவகச்சேரி)

**LION கே. வி. முத்துக்குமாரசாமி** (சாவகச்சேரி)

**LION எஸ். பத்மநாதன்** (மானிப்பாய்)

ஆகியோரையும்

யாழ். மாவட்ட சமாதான நீதிவானாகப் பதவியேற்றுள்ள

**LION ப. செல்லத்துரை** (அதிபர், கைதடி)

அவர்களையும் மனமார வாழ்த்துகின்றோம்.

**சகானா**
BS 3A. பஸ் நிலையம், சாவகச்சேரி,
ஆஸ்த்மா நோய் நிவாரணி
பங்கஜ கஸ்தூரி
இவ்விடம் கிடைக்கும்
தொலைபேசி இல.
உள்ளூர்:- 070 - 212743
வெளியூர்:- 0094 - 70 212743

**விமலாஸ்**
இல. 9, நவீன சந்தை, சாவகச்சேரி.
அன்பளிப்புப் பொருள்கள்,
அழகு சாதனப் பொருள்கள்,
பாட்டா, D. S. I சீபா
மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ளலாம்.

**V. V. M. S. ஜுவலர்ஸ்**
மெஷின் கட்டிங்
இல. NBS 9. பேருந்து நிலையம்,
சாவகச்சேரி.

**LION K. சற்குணதேவன்**
தபால் கந்தோர் வீதி,
சாவகச்சேரி.
(சி/9992)



உ
சிவமயம்
''மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்''

தமிழ்க் கலாசார மறுமலர்ச்சியின் தந்தையும்
ஐந்தாம் சமயகுரவருமான
**நல்லை ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்**
அவர்களின்

**குருபூசைத் தினவிழா**

காலம்: 29-11-1999 மக நட்சத்திரம் கூடிய திங்கட்கிழமை காலை 7-00 மணி முதல்

இடம்: ஸ்ரீ பரமேஸ்வரன் ஆலயம், யாழ். பல்கலைக்கழகம்.

**நிகழ்ச்சி நிரல்**

1) ருத்திராபிஷேகமும் விசேட பூசையும்
2) பண்ணிசை– இந்துநாகரிக சிறப்புக்கலை மாணவிகள்
3) தலைமையுரை– தலைவர், இந்து மன்றம், யாழ். பல்கலைக்கழகம்
4) சிறப்புச் சொற்பொழிவு– **திருமதி நா. செல்வநாயகம்** தலைவர், நுண்கலைத்துறை, யாழ். பல்கலைக்கழகம் விடயம்– '' நாவலர் வழி ''
5) நன்றியுரை– செயலாளர், இந்து மன்றம்.

★ அன்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இந்து மன்றம்,
யாழ், பல்கலைக்கழகம்

ஸ்ரீ பரமேஸ்வரன் ஆலய பரிபாலனசபை
பரமேஸ்வராக் கல்லூரி இயக்குநர் சபை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி.
26-11-99 (71314)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செய்தித் தணிக்கை விவகாரத்தில் இரகசியப் பொலிஸாரின் தலையீடு

## பத்திரிகை ஆசிரியர்கள் அவை கண்டனம்

கொழும்பு, நவ. 28

செய்தித்தணிக்கைக்கான தகுதிவாய்ந்த அதிகாரியாக அரச தகவல் திணைக்களப் பணிப்பாளர் நியமிக்கப்பட்டிருப்பதாக அரசாங்கம் வர்த்தமானி அறிவித்தல் மூலம் தெரிவித்திருக்கையில் முதல் தடவையாக இந்த விவகாரத்தில் இரகசியப் பொலிஸார் தலையிட்டிருப்பது குறித்து அதிர்ச்சியடைந்துள்ளோம்

இலங்கை பத்திரிகை ஆசிரியர்கள் அவை மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது

செய்தித்தணிக்கை தொடர்பாக 'தினக்குரல்' ஆசிரியர் ஆ. சிவநேசச் செல்வன் இரகசியப் பொலிஸாரால் விசாரிக்கப்பட்டமை தொடர்பாக அந்த அமைப்பு விடுத்துள்ள அறிக்கையிலேயே இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது.

செய்தித் தணிக்கையை வன்மையாகக் கண்டித்துள்ள அந்த அமைப்பு 'தினக்குரல்' ஆசிரியர் சிவநேசச் செல்வன் விடயத்தில் நடந்து கொண்டதைப் போன்று அடாத்தாகச் செயற்படுவதை விடுத்து பத்திரிகைகளின் நம்பிக்கையைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அரசைக்கோரியுள்ளது

## காலையில் வேலைக்குச் சென்றவர் குளத்தில் சடலமாக மீட்கப்பட்டார்

காலையில் வீட்டில் இருந்து வேலைக்கெனப் புறப்பட்டுச் சென்றவர், குளத்தில் சடலமாக மீட்கப்பட்டார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இச் சம்பவத்தில், யாழ்ப்பாணம் இராசசிங்கம் வீதியைச்சேர்ந்தவரும், யாழ். மாநகரசபை சிற்றூழியருமான தியோ லோரன்ஸ் (வயது 29) என்ற மூன்று பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்தவராவார்.

வேலைக்கெனப் புறப்பட்டவர் வேலைக்குச் செல்லாது இடைவழியில் மது அருந்தியதாகவும் —

அதனைத் தொடர்ந்து நண்பருடன் சேர்ந்து யாழ்ப்பாணம் தேவரிக்குளத்திற்கு குளிக்கச் சென்றதாகவும் —

குளத்தில் பாய்ந்ததும் நீரில் மூழ்கி நீண்டநேரமாக இவர் வெளியே வராததை அடுத்து தேடிப்பார்த்த போது குளத்துக்கடியில் இருந்த தாமரைக் கொடியில் சிக்குண்டு இறந்து கிடந்ததாகவும் —

மரண விசாரணையின் போது தெரிவிக்கப்பட்டது.

குளத்தில் இருந்து மீட்கப்பட்ட சடலம்யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டது

மரணவிசாரணையை மேற்கொண்ட மரணவிசாரணை அதிகாரி ரி. ஜெயரத்தினம் பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்டார். (ஐ-15)

# மடுச் சம்பவத்தைக் கண்டித்து இன்று இறைவேண்டல் நிகழ்வு

## யாழ். மரியன்னை பேராலயத்தில்

யாழ்ப்பாணம், நவ. 28

மடுத் திருப்பதியில் கடந்த 20ஆம்திகதிஇடம்பெற்ற தாக்குதல் சம்பவத்தைக் கண்டித்து யாழ். மரியன்னை பேராலயத்தில் இன்று காலை 10 மணி முதல் பிற்பகல் 1.30 மணிவரை மாபெரும் ஒன்று கூடலும் இறை வேண்டலும் இடம்பெறவுள்ளன.

மரியன்னை பேராலயத்தில் யாழ். ஆயர் அதி வண. தோமஸ் சௌந்தரநாயகம், ஒப்புக்கொடுக்கும் திருப்பலியுடன் ஆரம்பமாகும் இந்த நிகழ்வை யாழ். மறை மாவட்ட நீதி சமாதான ஆணைக்குழு ஏற்பாடு செய்துள்ளது.

மடுத் தேவாலயம் மீதான தாக்குதலுக்கு எதிர்ப்பையும் கண்டனத்தையும் தெரிவிக்கவும்—

இறந்தவர்களுக்கு அஞ்சலியையும், அவர்களின் குடும்பத்தவர்களுக்கு அனுதாபத்தையும் தெரிவிக்கவும்—

ஆலயங்களில் தஞ்சமடையும் அப்பாவி மக்கள் மீது நடத்தப்படும் தாக்குதல்கள் இனியும் தொடராதிருக்க வேண்டும் என்று கோரியும்—

இந்த நிகழ்வு ஏற்பாடாகி உள்ளது.

இந்த நிகழ்வில் குடாநாட்டில் உள்ள பல பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளும் பங்குபற்றவிருக்கின்றனர்.

மடுத் தாக்குதலில் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் பிற்பகல் 1.30 மணிக்கு இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். [ஐ-க-3]

# பயணப் பாதுகாப்பு அனுமதி வழங்கப்பட்டோரின் விவரம்

யாழ்ப்பாணம், நவ. 28

யாழ். குடாநாட்டில் இருந்து வெளி இடங்களுக்கு பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் பதிவு இலக்கங்கள் உதயனில் வெளியாகி வருவது தெரிந்ததே.

பயண அனுமதி வழங்கப்பட்டவர்களின் [இம் மாதம் 26 ஆம் திகதி வரை] பதிவு இலக்கங்கள் பிரதேச செயலக ரீதியாக வருமாறு:-

சங்கானை

[119353ஏ], [119353பி], [119353சி], [121453ஏ], [127021ஏ], [127070ஏ],

நெடுந்தீவு

[12484ஏ], [12484பி], [12503ஏ] [12503பி], [12503சி], [12503டி].

யாழ்ப்பாணம்

[124332ஏ], [121314ஏ], [121315ஏ], [121316ஏ], [124724ஏ], [124724பி], [124724சி], [126532ஏ], [126565ஏ], (126688ஏ], [126790ஏ], [126837ஏ], [126892ஏ], [126915ஏ], [126916ஏ], [126941ஏ], [12499ஏ].

ஊர்காவற்றுறை

(12163ஏ), (12167ஏ), (12167பி). (12167சி), (12167டி), (12200ஏ), (12365ஏ), (12365பி), (12365சி), (12396ஏ), (12396பி), (12396சி), (12475ஏ), (12487ஏ), (12487பி), (12493ஏ), (12500ஏ),

கோப்பாய்

(116796ஏ], (124040ஏ),

நல்லூர்

(122985ஏ), (122985பி], (126906ஏ), (117376ஏ), [117379ஏ), (123631ஏ], (125146ஏ], (125146பி), (125165ஏ), (125165பி),

(125270ஏ), (125322ஏ), (125322பி), (125322சி), (125412ஏ), (127062ஏ), (127082ஏ), (127091ஏ), [127095ஏ), (127096ஏ), (127363ஏ).

சண்டிலிப்பாய்

(119220ஏ, (121846ஏ), (121846பி), (121846சி), (123360ஏ), (123360பி), (123360சி), (123360டி), (123509ஏ), (124964ஏ), [124964பி], [124994ஏ], (124994பி), [124994சி). [125008ஏ), (125008பி), (125039ஏ) [125058ஏ), (125058பி), (125085ஏ), (125233ஏ) (125267ஏ), (125407ஏ), (125407பி), (125407சி), (125418ஏ), (127084ஏ), (127093ஏ), (127436ஏ), (127437ஏ), (127445ஏ), (127445பி), [125058சி].

தெல்லிப்பழை

[121631ஏ], [125070ஏ], [125290ஏ], [125393ஏ], [125393பி], [125393சி], [125436ஏ].

உடுவில்

[133103ஏ] [121734ஏ], [121734பி], [121734சி]. [125174 ஏ], [125174பி], [125445 ஏ], [217061 ஏ], [127083 ஏ], [127085 ஏ], [127088 ஏ], [127408 ஏ].

வேலணை

[12141 ஏ], [12453 ஏ], [12453 பி], [12473 ஏ], [12473]பி, [12473 சி], [12473 டி], [12480 ஏ], [12483 ஏ], [12497 ஏ], [12497 பி], [12497 சி], [12497 டி], [13497 ஈ], [12497 எவ்], [12497 ஜி], [12512 ஏ], [12512 பி], [12513 ஏ], [12513 பி], [12516 ஏ].

## ஏற்புவலியால் மரணம்

யாழ்ப்பாணம், நவ. 28

ஒரு மாதத்திற்கு முன்னர் பழைய தகரம் வெட்டிக்காயமடைந்த ஒருவர் அதற்கு ஏற்புத் தடை ஊசி மருந்து போடாது கவனயீனமாக இருந்ததால் ஏற்புவலி ஏற்பட்டு உயிரிழந்தார்.

யாழ்ப்பாணம் இராசசிங்கம் வீதிப்பகுதியைச் சேர்ந்த பர்ணாந்து அந்தோனி [வயது 67] என்பவரே மரணமானவராவார்.

திடீரென ஏற்பட்ட காய்ச்சல் கழுத்துப் பிடிப்பினை அடுத்து யாழ். ஆஸ்பத்திரிக்கு எடுத்து வரப்பட்ட சமயம் இடைவழியில் அவர் உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்ட சடலம் அங்கு நடைபெற்ற பிரேத பரிசோதனை, மரணவிசாரணையை அடுத்து உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது.

மரண விசாரணையை மரண விசாரணை அதிகாரி ரி. ஜெயரத்தினம் நடத்தினார். [ஐ-15]

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



**திருமதி வாலாம்பிகை சோமசுந்தரம்**

தோற்றம் 15-06-1919 — மறைவு 29-10-1999

அன்பும் பண்பும் பாசமும் தந்து
எங்களுக்கு நல்வழி காட்டிய
எங்கள் அன்புத்தெய்வமே!


உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றி கூறுவதுடன் அன்னாரின் இல்லத்தில் இன்று [28-11-99] ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ள ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.

2/2, முதலாம் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். [71329]

# 31-ம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக் கிருத்திய அழைப்பும்



அமரர்
**தம்பிமுத்து சோமசுந்தரம்**

மலர்வு 01-04-1942 — உதிர்வு 29-10-1999

''உறவுக்கு உயிர்ப்பாக அன்பை விதைத்தீர்
உயர்வான பண்பினால் மனங்களில் நின்றீர்
இறவாது உம் நினைவென்றும் உமைப் போற்றி
வாழ்வோம்

இறை மேன்மை கண்டுநீர் சாந்தியில் வாழ்க!

இன்று 28-11-99 ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

- குடும்பத்தினர்

சங்குவேலி தெற்கு,
மானிப்பாய். (71335)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அச்சுக் கோப்பாளர் தேவை

அனுபவமுள்ள பெண் அச்சுக் கோப்பாளர் தேவை.

**இலங்கையன் பதிப்பகம்**
(ஸ்ரீலங்கா அச்சகம்)
கே. கே. எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
(71322)



## விற்பனைக்கு

- பக்ஸ் FAX F 780 BX
- டெக் S. R. 38, S. R. 50 PANASONIC
- பிரிச் யூனிற் டன்பஸ் ½H ⅓ H
- ஐஸ்பழக்குச்சி
- ஐஸ்கோன்

என்பனவற்றை மலிவு விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

நாதன் களஞ்சியம்
இல. 213C, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல. 2916
(71325)



## மிருதங்க அரங்கேற்றம்

செல்வன்
**கி. அனந்தகோபனுக்கு**
**எங்களது வாழ்த்து**

நந்தியெம் பெருமான் காட்டும்
நற்பெரும் கலை பயின்று
இன்றைய நாள் அரங்கம்
இனிதுற ஏறுமெம்
அன்பரின் ''மைந்த'' நீவிர்
அழகிய கலையிற்றேறி
என்றுமே எழிலாய் வாழ
எங்களின் அன்புசால் வாழ்த்து!

பரிபாலன சபை
மாத்தனைக் கந்தசாமி கோயில்
சம்பியன் லேன்,
கொக்குவில்
(71337)


## 21ஆம் நாள் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

தாயின் மடியில்
1944 – 04 – 17



இறைவன் அடியில்
1999 – 11 – 08

### திருமதி தையல்நாயகி தயானந்தன்
(பிள்ளை அக்கா)

எமது குடும்ப விளக்காக ஒளிவிட்டுப் பிரகாசித்து அணைந்த எமது பாசமிகு தாயார் சிவபதமடைந்த செய்தியை அறிந்து எமது இல்லத்திற்கு வருகை தந்து அனுதாபம் தெரிவித்து ஆறுதல் வார்த்தை கூறியோருக்கும், கொழும்பில் அன்னாரின் பூதவுடலுக்கு அஞ்சலி செலுத்திய அனைவருக்கும், தந்தி, தொலைபேசி மூலம் ஆறுதல் கூறியோருக்கும், இறுதிக் கிரியைகளின் போது மலர் வளையங்கள் வைத்து அனுதாபப் பிரசுரங்கள் பிரசுரித்தவர்களுக்கும், உடன் பிறந்த சகோதரர்போல் எல்லா விடயங்களிலும் உதவி புரிந்த மாகாண மத்திய அரசாங்க கட்டடத் திணைக்கள உத்தியோகத்தர்களுக்கும் ஊழியர்களுக்கும் மற்றும் நீர்கொழும்பு ஆதார வைத்தியசாலை வைத்தியர்களுக்கும், ஆஸ்திரேலிய பிரஜைகளுக்கும், யாழ் மருத்துவபீட 17 ஆம் அணி மாணவர்களுக்கும் நுண்கலைப்பீட 2 ஆம் வருட மாணவர்களுக்கும் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்களுக்கும், இறுதிக் கிரியையில் கலந்து கொண்ட அனைவருக்கும் எமது இதயம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இன்று (28 – 11 – 99) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்குமாறு அன்புடன் அழைக்கிறோம்.

கணவர், பிள்ளைகள்.
43, அச்சுக்கூட ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு
(71331)

## நாட்டுக்கூத்து நிகழ்வு

யாழ்ப்பாணம், நவ. 28
பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக்கழகம் நடத்தும்நாட்டுக்கூத்து போட்டி விழாவின் நிகழ்வு — 6 இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாசாலையில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் பாசையூர் செ.இராஜேஸ்வரன் குழுவினரின் 'மன உறுதி, தம்பாட்டி சாந்தினி நாடக மன்றத்தின் ''அதியரசன்', பருத்தித்துறை தாமோதரம்பிள்ளை நாடக மன்றத்தின் 'வீரக்குமரன்', பளை சென். பீற்றர்ஸ் கலை மன்றத்தின் 'ஒரு சிரசு பரிசாகிறது' ஆகிய நாட்டுக் கூத்துகள் இடம்பெறவுள்ளன.

மேற்படி நிகழ்வில் பருத்தித்துறை பிரதேச செயலர் ஆ. சிவசாமி பிரதம விருந்தினராகவும் மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் வி. பி. வேலாயுதபிள்ளை சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர். (க-3)

## பிரதேசசபைகளுக்கு வாகனம்

நெடுந்தீவு, நவ. 28
நெடுந்தீவு, கோப்பாய், வேலணை, மல்லாகம், சாவகச்சேரி பிரதேச சபைகளுக்கும் சாவகச்சேரி பட்டின சபைக்கும் புதிய ஜீப் வண்டிகள் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை வழங்கப்பட்டன.

மேற்படி பிரதேச சபைகளின் தலைவர்கள் தமக்குரிய வாகனங்களின் திறப்புக்களை யாழ்ப்பாண அரசாங்க அதிபர் கே சண்முகநாதனிடம் இருந்து பெற்றுக் கொண்டனர். (ஐ-111)

## வரவேற்பு வளைவுகள் அமைக்கப்படும்

வலி. கிழக்கு, நவ. 28
நல்லூர் பிரதேச சபைக் குட்பட்ட பகுதிகளில் நான்கு இடங்களில் வரவேற்பு வளைவுகள் அமைக்கப்படவுள்ளன.

பரமேஸ்வராச் சந்தி, பூனாறி மடத்தடி, இணுவில், கோண்டாவில் டிப்போச்சந்தி ஆகிய நான்கு இடங்களிலேயே வரவு செலவுத்திட்ட நிதி மூலம் இந்த வரவேற்பு வளைவுகள் அடுத்த ஆண்டு முற்பகுதியில் அமைக்கப்பட உள்ளதாக சபையின் செயலாளர் தெரிவித்தார். (ஐ-180)

## பாடசாலையில் திருட்டு

புன்னாலைக்கட்டுவன்நவ 28
வயாவிளான் மத்திய மகா வித்தியாலயத்தில் கடந்த 23 ஆம் திகதி அதிகாலை 2 மணியளவில் ஜன்னல் கம்பிகள் உடைக்கப்பட்டு பொருள்கள், பணம் என்பன திருடப்பட்டு உள்ளன,

ஜன்னல் கம்பிகள் உடைக்கப்பட்ட அந்த அறை வழமையாக ஆசிரியர்களும் சிற்றூழியர்களும் தங்கும் அறை எனவும்— திருட்டுப்போன பொருட்கள், பணம் என்பன அவர்களுக்குச் சொந்தமானவை எனவும் — தெரியவருகிறது (ஐ-4-13)


## பரி. பேதுரு பாலர் பாடசாலை

பரி. பேதுரு பாலர் பாடசாலையின்
2000 ஆம் ஆண்டு
அனுமதிக்கான
விண்ணப்பப் பத்திரங்கள்
வழங்கப்படுகின்றன.

பெற்றுக்கொள்ள வேண்டிய முகவரி:
பரி.பேதுரு பாலர் பாடசாலை
இல. 9, வேம்படி வீதி,
யாழ்ப்பாணம்.



## தேவை

தொலைத்தொடர்பு நிலையம் மற்றும் முகவர் தபாலகத்தில் புணிபுரியப் பெண்கள் தேவை. கல்விச் சான்றிதழ்களுடன் 29-11-99 திங்கள் காலை 10.00 மணிக்குப்பின் நேரில் வரவும்.

162, ஸ்ரேசன் றோட், கொக்குவில்.
(71326)
— நிர்வாகி



## பல் கட்டுதலும் மூக்குக் கண்ணாடி வழங்கலும்

- பல் கட்டுதல்
- மிதந்த பற்களுக்கு கிளிப்போடுதல்
- மூக்குக் கண்ணாடி வழங்கல்

தூர இடத்திலிருந்து வருவோர் துரித கதியில் உடனுக்குடன் கவனிக்கப்படுவர்.

குறிப்பு: ''பாடசாலை மாணவர்களுக்கு விஷேட சலுகைகள்''

**எரிக் கணேஷ்**
566, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T P. 2486
(சி/10013)



## யாழ். நகரில் வந்துவிட்டது!

பல ஆண்டுகாலமாக தமிழ் மக்களின் அபிமானத்துக்குரிய
**மிலேனியம் 2000ஆம் ஆண்டுக்கான**
**மெய்கண்டான் தினசரி நாள்காட்டி**

தனித்துவமாக மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள
யாழ். ஏகவிநியோகத்தர்கள்:

**ஈஸ்வரன் ரேடர்ஸ்**
69, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T. P. No. 021 — 2813

குறிப்பு: உங்கள் தேவைகளுக்கு முந்துங்கள். குறிப்பிட்ட தொகையே கையிருப்பில் உள்ளது. வியாபாரிகளுக்கு விசேட கழிவு வழங்கப்படும்.
(சி/10015)


## மரண அறிவித்தல்கள்

### திருமதி சுந்தரம் கண்ணகைப்பிள்ளை

கைதடி நுணாவிலைச் சேர்ந்த திருமதி சுந்தரம் கண்ணகைப்பிள்ளை 27-11-1999 இல் காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற விநாசித்தம்பி சுந்தரம் அவர்களின் அன்பு மனைவியும், திருமதி இரத்தினம் அன்னபூரணம், திருமதி சிவசுப்பிரமணியம் சிவகாமி, திருமதி பத்மநாதன் தனலட்சுமி, வீ எஸ். துரைராஜா (கனடா), திருமதி. விசுவலிங்கம் சிவபாக்கியம் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 28-11-99 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு குச்சுப்பிட்டி மயானத்தில் நடைபெறும்.

இந்தஅறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-
செ. பத்மநாதன்
(மருமகன்)
கைதடி நுணாவில்,
சாவகச்சேரி.
(71328)

### குமாரசாமி விக்கினேஸ்வரன்
(விக்கி)

(ஏயர் கொண்டிசன் றெவ்ஜிறேற்றர் மெக்கானிக் காங்கேசன்துறை வீதி, தட்டாதெருச் சந்தி)

கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் அதே இடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட குமாரசாமி விக்கினேஸ்வரன் 26 – 11 – 99 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற குமாரசாமி மற்றும் நாகலட்சுமி ஆகியோரின் அன்புப் புதல்வனும், சிவசுப்பிரமணியம், நடேசபிள்ளை [நீர்கொழும்பு], மகேஸ்வரி, நாகேஸ்வரன், சறோஜினிதேவி [சாந்தி], சிவம் [அமரர்] தர்மபூபதி கௌரி [கொழும்பு] ஆகியோரின் அன்புச் சகோதரனும், வவா, குமுதா, கனகலிங்கம், தவமணிதேவி, தில்லைநாதன், ஸ்ரீகுமார் [குட்டி கனடா] ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 26-11-99 வெள்ளிக்கிழமை கோம்பயன்மணல் இந்து மயானத்தில் நடைபெற்றன என்பதனை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
தாய் கு. நாகலட்சுமி மற்றும்
சகோதரர்கள், மைத்துனர்கள்,
மக்கள், மருமக்கள்.
கேணியடி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.
(71342)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## காணாமற் போனோர் விடயம்:
# கண்டுபிடிக்க முடியாதவர்கள் என்று தெரிவிக்கும் கடிதத்தை ஏற்க மறுப்பு
### திருப்பி அனுப்பப் பாதுகாவலர்கள் தீர்மானம்

யாழ்ப்பாணம், நவ. 28

குடாநாட்டில் கைதாகிக் காணாமற்போனவர்கள் எனக் கருதப்படுபவர்களில் 355 பேர் தொடர்பாக பாதுகாப்பு அமைச்சுச் செயலர் அவர்களது உறவினர்களுக்கு அனுப்பிய கடிதங்களை மீளத் திருப்பி அவருக்கே அனுப்புவதென காணாமற்போனோரின் பாதுகாவலர் முடிவு செய்துள்ளனர்.

உண்மைக்குப் புறம்பான தகவல்கள் அடங்கிய இந்தக் கடிதங்களை ஏற்கத் தாம் தயாரில்லை என்று தெரிவித்து அந்தக் கடிதங்களை ஏற்க அவர்கள் மறுத்துள்ளனர்.

1996-97 ஆம் ஆண்டு காலப் பகுதியில் பல்வேறு சந்தர்ப்பங்களில் கைது செய்யப்பட்ட பின்னர் காணாமற்போனதாகக் கருதப்பட்டவர்களில் 355 பேரைத் தேடிக்கொள்ள முடியாது என விசாரணைக் குழு முடிவு செய்துள்ளது.

அந்த விவரத்தைத் தெரிவிக்கும் கடிதங்களை அவர்களின் உறவினர்களுக்கு பாதுகாப்பு அமைச்சுச் செயலர் கே. ஆர். சந்திரானந்த டி. சில்வா அனுப்பி வைத்திருந்தார்.

மனித உரிமை ஆணைக் குழுவின் யாழ். அலுவலகத்துக்கு அனுப்பப்பட்ட இந்தக் கடிதங்களைப் பெறுவதற்காக காணாமற்போனோரின்பாதுகாவலர்கள் நேற்று அங்கு சென்றிருந்தனர்.

செம்மணியில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வின் போது மீட்கப்பட்ட இரு எலும்புக் கூடுகளுக்கு உரியவர்கள் என்று அவர்களது உறவினர்களால் அடையாளம் காணப்பட்ட மகேந்திரன் பாபு, இராசையா சதீஸ்குமார் ஆகியோரின் உறவினர்களுக்கும் இந்தக் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன என்றும் —

அடையாளம் காணப்பட்ட அவர்களைக் கூடத் தேடிக் கண்டுபிடிக்க முடியாதவர்கள் பட்டியலில் சேர்த்துள்ளதால் இந்தக் கடிதங்களில் சந்தேகம் ஏற்பட்டுள்ளது என்றும் —

உண்மைக்குப் புறம்பான இந்தக் கடிதத்தை ஏற்க முடியாது என்றும் —

காணாமற் போனோரின் பாதுகாவலர் சங்கம் தெரிவித்துள்ளது.

இந்தக் கடிதங்களைக் கையேற்காது மனித உரிமைகள் ஆணைக்குழு மூலமாகவே பாதுகாப்பு அமைச்சுச் செயலாளருக்கு திருப்பி அனுப்பவிருக்கிறோம் என்று அந்தச் சங்கப் பிரதிநிதி தெரிவித்தார். (உ-3-9)

# மூன்று மருத்துவ தாதியர்கள் பிரசவ வார்ட்டுக்கு நியமனம்

யாழ்ப்பாணம். நவ 28

யாழ். போதனா வைத்தியசாலை பிரசவ வார்ட்டில் நிலவும் மருத்துவ தாதியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யுமுகமாக புதிதாகப் பயிற்சிபெற்று வெளியேறிய மூன்று மருத்துவ தாதியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்

யாழ். தாதியர் பயிற்சிப் பாடசாலையில் பயிற்சி நெறியினை முடித்துக் கொண்டு வெளியேறிய நான்கு மருத்துவத்தாதியர்களிலேயே மூவர் யாழ். ஆஸ்பத்திரிக்கு நியமனம் பெற்றுள்ளனர்.

இவர்களுடன் தற்போது இவ்வைத்தியசாலையில் 12 மருத்துவத்தாதியர்கள் கடமைபுரிந்து வருகின்றனர். எனினும் போதனா வைத்தியசாலையில், இப்பணியாளர்களுக்கான பற்றாக்குறை தொடர்ந்தும் இருந்து வருவதாகவும்–

கடந்த காலங்களில் 32 மருத்துவத்தாதியர் பணிபுரிந்து வந்ததாகவும் தற்போது பிரசவ விடுதி விஸ்தரிக்கப்பட்டு, பிரசவத்தாய்மாரும் அதிகரித்துக் காணப்படும் இக்கால வேளையில, இப்பற்றாக்குறை இப்பணியில் பல சிரமங்களை ஏற்படுத்துவதாகவும் ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ)

## விடுவிப்பு

யாழ்ப்பாணம், நவ. 28

படையினரால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த இளைஞர் ஒருவர் விடுவிக்கபபட்டுள்ளதாக மனித உரிமைகள் ஆணைக் குழுவுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

கைதடி தெற்கைச் சேர்ந்த வல்லிபுரம் உதயகரன்(வயது 26) என்பவரே கடந்த 26ஆம் திகதி கைது செய்யப்பட்டு நேற்று விடுவிக்கப்பட்டார். (உ-9-10)

## பரிசளிப்பு வைபவம்

யாழ்ப்பாணம், நவ. 28

நல்லூர் சயன்ஸ் அக்கடமியின் பரிசளிப்பும் கணிப்பீட்டு அறிக்கை வழங்கும் நிகழ்வும் இன்று மாலை 4-00 மணிக்கு நடைபெறவுள்ளன.

யாழ் மத்திய கல்லூரியின் பிரதி அதிபர் எல். ஓங்காரமூர்த்தி இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

மாணவர்களின் வளர்ச்சி கருதி இந்த நிகழ்வுக்கு பெற்றோர்களையும் சமூகம் தரும்படி நிர்வாகி கேட்டுள்ளார். [4]

## இருவர் கைது!

யாழ்ப்பாணம், நவ 28

பெண் உட்பட இருவர் படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளதாக அவர்களின் உறவினர்களினால் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ் அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

யாழ். காங்கேசன் துறை வீதியைச் சேர்ந்த திருநாவுக்கரசு பரமேஸ்வரி (வயது 47) என்பவர் கடந்த 25 ஆம் திகதி யாழ். பெருமாள் கோயில் பகுதியில் கச்சான் வியாபாரம் செய்து கொண்டிருந்தபோது அங்கு வைத்துக் கைது செய்யப்பட்டதாகவும் —

யாழ். நாவலர் வீதியைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை பாலசுந்தரம் (வயது 57) என்பவர் கடந்த 25 ஆம் திகதி கைது செய்யப்பட்டதாகவும் — தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-9-10)

# 'பிக்பொக்கட்' அடிப்போர் ஆஸ்பத்திரியிலும் கைவரிசை

யாழ்ப்பாணம். நவ. 28

யாழ்ப்பாணத்தில் மக்கள் அதிகம் கூடும் பகுதிகளில் பிக்பொக்கட் அடிப்பவர்கள் முடிச்சுமாறிகளின் நடமாட்டம் அதிகரித்துள்ளது.

முக்கியமாகப் பஸ்நிலையப் பகுதி, ஆஸ்பத்திரி ஆகிய இடங்களில் அடிக்கடி இத்தகைய சம்பவங்கள் நடைபெற்று வருகின்றன,

யாழ். போதனாவைத்தியசாலையில் முக்கியமாக அதிக நோயாளர் வருகைதரும் மெடிக்கல் கிளினிக், வெளிநோயாளர் பிரிவுகளில் இந்தவகைத் திருட்டுக்கள் தற்போது அதிகரித்துள்ளன,

இவ்விரு இடங்களிலும் நோயாளர்களின் நெருக்கடியைப் பயன்படுத்தி 'பிக்பொக்கட்' அடிப்பவர்கள் நோயாளர்களின்கைப் பைகளைக் கூரிய பிளேட்டினால் வெட்டியும். 'சிப்' களைத் திறந்தும் பணம், நகை என்பவற்றை அபகரித்துச்சென்று விடுகின்றனர்.

கடந்த வியாழக்கிழமை மெடிக்கல் கிளினிக்குக்கு வந்திருந்த பெண் நோயாளி ஒருவரின் கைப்பையை அவருக்குத் தெரியாமலேயே திறந்து அதனுள் இருந்த பணப்பையை எடுத்து உள்ளே இருந்த ஆயிரத்து 500 ரூபா பணம் அபகரிக்கப்பட்டுள்ளது.

நீண்ட நேரத்தின் பின் கைப்பை திறந்திருந்ததால் பதற்றமடைந்த அப் பெண்நோயாளி கைப்பையைப் பார்த்தபோதே அதனுள் காசுடன் இருந்த பேர்ஸ் திருட்டுப்போனது தெரியவந்தது.

இதுபற்றி உடனே ஆஸ்பத்திரிப் பொலீஸ் பிரிவில் முறையிட்டும் எவ்வித பலனும் கிட்டவில்லை.

நவம்பர் மாதத்தில் மாத்திரம் யாழ். ஆஸ்பத்திரி மெடிக்கல் கிளினிக்கில் நான்கு பிக்பொக்கட் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

இதனால் கிளினிக்கிற்கு வரும் நோயாளர்கள் நகை, பணம் என்பவற்றை எடுத்து வருவதைத் தவிர்க்குமாறு கிளினிக் வட்டாரங்ளில் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை ஆஸ்பத்திரி மாதா கோயில் உண்டியலும் கடந்த மூன்று மாதங்களில் இருதடவைகள் உடைக்கப்பட்டு பணம் சூறையாடப்பட்டுள்ளது. (ஐ)

## மருந்தகக் கிளை திறப்புவிழா

யாழ்ப்பாணம், நவ. 28

வலிகாமம் தெற்கு பிரதேச சபையில் ஆயுர்வேத மருந்தகத்தின் நான்காவது கிளை நாளை திங்கட்கிழமை நண்பகல் 12 மணிக்கு அந்தச் சபையின் தலைவர் தி. மா. செல்வராஜாவால் திறந்து வைக்கப்படவிருக்கின்றது.

## பரீட்சை அறிவுறுத்தல் கூட்டம்

வலிகாமம் தெற்கு, நவ. 28

எதிர்வரும் டிசம்பர் மாதம் ஆறாம் திகதி ஆரம்பமாக உள்ள ஜி. சீ. ஈ.சாதாரணதர பரீட்சை தொடர்பான அறிவுறுத்தல் கூட்டம் வலிகாமம் கல்வி வலயத்தில் எதிர்வரும் முதலாம் திகதி புதன்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு இராமநாதன் கல்லூரியில் நடைபெறும்.

பிரதம பரீட்சகர்கள். [illegible] நோக்குநர்கள் இக் கூட்டத்தில் கலந்து கொள்ள அழைக்கப்பட்டுள்ளனர். (ஐ-152)

# மின்தடைக்கான காரணம்: அறிந்துகொள்ள வசதி

யாழ்ப்பாணம், நவ 28

குடா நாட்டில் அடிக்கடி ஏற்படும் மின்தடைகளுக்கான காரணத்தைப் பொதுமக்கள் விசாரித்து அறிந்து கொள்வதற்கு விசேட ஏற்பாடுகளை மின்சார சபை மேற்கொண்டுள்ளது.

காங்கேசன்துறையில் இயங்கும் மின் நிலையத்திலும் சுன்னாகம் மின் நிலையத்திலும் ஏற்படும் சில தடங்கல்கள் காரணமாகக் குடாநாட்டில் மின் விநியோகம் அடிக்கடி தடைப்படுகின்றது என்று மின்சார சபை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மின் தடை காரணமாகப் பாதிக்கப்படும் மக்கள் தமது விவரங்களை தெரிவிக்க இரு பராமரிப்பு நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது

யாழ் மாநகரசபைக்கு உட்பட்டவர்கள் 2609 என்ற தொலைபேசி இலக்கத்தில் உள்ள நிலையத்துடனும் —

மாநகர சபைக்கு வெளியே ஆனைக்கோட்டை, கொக்குவில், கோண்டாவில், திருநெல்வேலி, கல்வியங்காடு, இருபாலை, கோப்பாய் ஆகிய பகுதிகளில் வசிப்பவர்கள் 2498 என்ற தொலைபேசி இலக்கத்தில் உள்ள நிலையத்துடனும் —

தொடர்புகொண்டு விவரங்களைத் தெரிவிப்பதுடன் தடைக்கான காரணத்தையும் அறியலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது (உ-3)

# மின்சாரத் தொழிலாளி மின் தாக்கிப் பலி

யாழ்ப்பாணம், நவ. 28

மின்சாரத் தொழிலையே தனது சொந்தத் தொழிலாக கொண்டிருந்த தனியார் மின்சாரத் தொழில் நுட்பவியலாளர் ஒருவர் மின்சாரம் தாக்கி உயிழந்தார்.

வட்டுக்கோட்டையில் நேற்று முன்தினம் நள்ளிரவு இடம்பெற்ற இச்சம்பவத்தில் மின்சாரத் தொழில் நுட்பவியலாளரான சின்னத்தம்பி அருள்கிருபைநாதன் (வயது 36) என்ற குடும்பஸ்தரே மரணமானவராவார்.

நேற்று நடைபெற இருந்த பூப்புனித நீராட்டுவிழாவுக்காக நேற்று முன்தினம் இரவு அலங்காரப்பந்தல் மற்றும் மின்சார அலங்கார வேலைகளில் ஈடுபட்டிருந்த இவர் வாசலின் முகப்பில் வரவேற்புப் பகுதியில் அமைக்கப்பட்டிருந்த வாழைக்குலைகளுக்கு ரியூப் பல்ப் போட்டு மின்சார இணைப்பு கொடுத்த வேளையே மின்தாக்குதலுக்குள்ளாகி அவ்விடத்திலேயே உயிரிழந்ததாக மரணவிசாரணையின் போது தெரிவிக்கப்பட்டது.

நேற்று அதிகாலை 2 மணியளவில் யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்ட அவரது சடலம் மரணவிசாரணையின் பின் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது.

மரணவிசாரணை அதிகாரி ஜெயரத்தினம் விசாரணைகளை நடத்தினார். (ஐ-15)

# மடுத்தாக்குதலுக்குக் கண்டனம் இந்துப் பேரவை அறிக்கை

யாழ்ப்பாணம், நவ 28

மடுத் தேவாலயத்தில் அப்பாவிப் பொதுமக்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலைக் கண்டித்து இந்து சமயப் பேரவை அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

மடுத்தேவாலயத்தில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் எதுவிதத்திலும் நியாயப்படுத்தக் கூடியதல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றோம்; இந்தத் தாக்குதலைக் கண்டிக்கிறோம்.

இத்தேவாலயத்தில் எமது இந்துச் சகோதரர்கள் படுகொலைக்கு உள்ளாக்கப்பட்டும், படுகாயத்திற்குள்ளாக்கப்பட்டும் உள்ளனர். இத் தாக்குதலுக்கான முழுப் பொறுப்பையும் அரசே ஏற்க வேண்டும்.

இதுபோன்ற கொலைகளை நிறுத்துவதற்கு சகல மதத்தவர்களும் மனிதநேயம் படைத்தவர்களும் அரசாங்கத்திற்கு ஏகோபித்த அழுத்தத்தை கொடுக்கவேண்டும்.

இனிமேலாவது இப்படியான கொலைகளை நிறுத்தி, பேச்சுவார்த்தைகளைத் தொடங்கி, சமாதானத்திற்கான நடவடிக்கைகளை முன்னெடுங்கள் என்று திரிகரண சுத்தியோடு கேட்டுக்கொள்கின்றோம்.

மடுத்தேவாலயத்தில் உயிரிழந்தவர்களுக்கும் காயமடைந்தவர்களுக்கும் அவர்களது குடும்பங்களுக்கும் அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம். இப்படி அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது (3-5)

## பயிற்சி நெறி

யாழ்ப்பாணம், நவ. 28

கோப்பாய், உடுவில் மற்றும் நல்லூர் பிரதேச செயலர் பிரிவுகளைச் சேர்ந்த சுமார் 150 பெண்கள் கலந்து கொள்ளும் மகளிருக்கான — 20 அம்சத் திட்டம் பற்றிய- பயிற்சி நெறி இன்று காலை 9-30 மணிக்கு வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது

பட்டினிக்கு எதிரான நிறுவனத்தின் பழங்கள், பதனிடல் பயிற்சியில் கலந்து கொண்ட மகளிரும் மற்றும பல்வேறு பயிற்சி நெறியில் கலந்துகொண்ட பெண்களும் இந்தப் பயிற்சி நெறியில் கலந்து கொள்வர் எனத் தெரிவிக்கப்பட்டது [உ-10-9]

## ஆறுமுகநாவலர்...
(2 ஆம் பக்கத் தொடர்)

யாள் ஆலய பங்குத் தந்தை, யாழ் மெதடிஸ்த தேவாலய மதகுரு ஆகியோரும் கலந்து கொண்டு மாணவர்களுக்கு ஆசிகளை வழங்குவர்.

மாணவர்கள் பாரம்பரிய முறைப்படி பெற்றோர். ஆசிரியர்கள் ஆகியோரின் கால்களில் வீழ்ந்து வணங்கி ஆசிகளைப் பெறுவதுடன் தமது பரீட்சை அனுமதி அட்டைகளையும் அவர்களிடம் இருந்து பெற்றுக் கொள்வர்.

ஆறுமுக நாவலரின் குருபூசைத் தினமும் அன்று அனுஷ்டிக்கப்படும். கல்லூரியின் பழைய மாணவரும் முன்னாள் ஆசிரியருமான ஆறுமுக நாவலருக்கும் கல்லூரியின் முன்னாள் அதிபரான பீற்றர் பேர்சிவல் அடிகளாருக்கும் நினைவுச் சிலைகளை நிறுவதற்கான அடிக்கல் நடும் நிகழ்வும் அன்று இடம் பெறும்.

கல்லூரியில் சமய சமத்துவ, சன்மார்க்க நெறியை ஏற்படுத்திய இந்த இருவரதும் சிலைகளை சிற்பாச்சாரியார் சிவப்பிரகாசம் வடிவமைக்க உள்ளார் (3-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயல்பு நிலையில்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மாவீரர்கள் என்றும் எம்முடன் நிலைத்து வாழ்வார்கள். எமது வீர விடுதலை வரலாற்றின் ஒரு முக்கிய திருப்புமுனையில் நின்றவாறு இன்று எமது மாவீரர்களை நாம் நினைவு கூர்கின்றோம். எமக்கு முன்னால் கால விரிப்பில் ஒரு புதுயுகம் எமக்காகக் காத்துநிற்கிறது. எமக்குப் பின்னால் கடந்த காலத்தில் இரத்தம் தோய்ந்த விடுதலை வரலாறு நீண்டு செல்கின்றது. மானிடத்தின் விடுதலைக்காக மாபெரும் தியாகங்கள் புரிந்த வரலாற்றுப் பெருமையுடன் எமது விடுதலை இயக்கம் பிறக்கப்போகும் புதுயுகத்தில் காலடி வைக்கிறது. இப்புதுயுகம் எமக்குச் சொந்தமானது; அநீதியையும் அடக்குமுறைகளையும் எதிர்த்து, நீதிக்கும் சுதந்திரத்துக்குமாக போராடிய மக்களுக்குச் சொந்தமானது. இப்புதுயுகத்தில் எமது மக்களின் நெடுங்காலக்கனவு நிறைவுபெறும. இத்தனைகாலமும் எமது மக்களைப் பீடித்த துன்பமும் துயரமும் அகன்று, எமது மக்களுக்கு விடிவு பிறக்கும்; எமது மண்ணுக்கு விடுதலை கிட்டும். எந்த இலட்சியத்துக்காக எமது மாவீரர்கள் போராடி மடிந்தார்களோ அந்தப் புனித இலட்சியம் இப்புதுயுகத்தில் நிறைவு பெறும்.

## உலகை வியப்பில் ஆழ்த்திய வெற்றி

ஒப்பற்ற மாபெரும் இராணுவ வெற்றியின் சிகரத்தில் நின்றவாறு இன்று நான் மாவீரர் நினைவுரையை நிகழ்த்துகின்றேன். இந்த மகத்தான இராணுவ வெற்றி முழுஉலகத்தையும் வியப்பிலும் திகைப்பிலும் ஆழ்த்தி உள்ளது. இது ஒரு சாதாரண போரியல் சாதனை அல்ல. போரியல் கலையில் ஓர் ஒப்பற்ற உலக சாதனையாகவே இவ்வெற்றி கருதப்படும். இந்த வெற்றியின் விஸ்வரூப பரிமாணம் கண்டு எமது எதிரி மட்டுமல்ல, எதிரிக்குப் பக்கபலமாக நின்று பயிற்சியும் ஆயுதமும் பண உதவியும் வழங்கி வந்த உலகநாடுகளும் மலைத்துப் போய் நிற்கின்றன. 'ஓயாத அலைகள் - 3'ஆகக் குமுறிய இப்பெருஞ் சமர் ஒரு சில நாள்களில் இமாலய சாதனையைப் படைத்தது. முழுப்பலத்தையும் ஒன்றுகுவித்து பெரும் படையெடுப்புக்களை நடத்தி, வருடங்களாக, மாதங்களாக தொடர் சமர்களை நிகழ்த்தி, ஆயிரக்கணக்கில் உயிர்ப் பலி கொடுத்து, சிங்கள இராணுவம் ஆக்கிரமித்து வைத்திருந்த வன்னியின் வளமிகு பகுதிகளை எமது வீரர்கள் கடுகதி வேகத்தில் மீட்டெடுத்தனர்.

## உலகின் புருவத்தை உயர்த்திய அற்புதம்

வன்னி மண்ணில் அகலக் காலூன்றிய எதிரி தொடர்வலயமாக நிறுவிய படைத்தளங்களும் கட்டளைப்பீடங்களும் இரும்புக்கோட்டைகளாக அமைக்கப்பட்ட இராணுவமுகாம்களும், மிகக் குறுகிய காலத்தில் - மிகக்கூடிய வேகத்தில் - புலிகளிடம் வீழ்ச்சி அடைந்த அற்புதம் உலகத்தின் புருவத்தை உயர்த்தியது.

வன்னியின் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பழம்பெரும் பட்டினங்களில் இருந்து எதிரி இராணுவம் விரட்டப்பட்டது. அங்கெல்லாம் புலிக்கொடி மார்தட்டி பெருமையுடன் பறக்கின்றது. காட்டுத்தீயாகப் பரவிய இப்பெருஞ்சமரில் எமது தாயகத்தின் இதயபூமியான மணலாற்றின் ஒரு பகுதி மீட்கப்பட்டதையிட்டு நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். காலம் காலமாக தமிழர் வாழ்ந்த இப்புனித மண்ணை சிங்கள இராணுவம் ஆக்கிரமித்து, தமிழர்களைக் கொன்றொழித்து, அங்கு சிங்களக் குடியேற்றத்தினை நிறுவிய சோக வரலாற்றினை எமது மக்கள் நன்கறிவர். வடக்கையும் கிழக்கையும் புவியியல் ரீதியாக இணைத்து வன்னியின் மிகச்செழிப்பான நிலங்களைக்கொண்ட எமது தேசத்தின் இதயபூமி மீண்டும் எமது கட்டுப்பாட்டில் வந்துகொண்டிருப்பது மகிழ்ச்சிக்குரிய விடயம். இந்த மண் மீட்பு எமது போராட்ட வரலாற்றில் ஒரு புதிய திருப்பத்தை எட்டுகிறது.

## இராணுவ நிபுணர்கள் பெருவியப்பு

போரியல் கலையில் புலிப்படை வீரர்களின் அபாரமான வளர்ச்சியையும் முதிர்ச்சியையும் இந்த 'ஓயாத அலைகள் - 3' என்ற வன்னிப் பெருஞ் சமர் உலகத்துக்கு நிரூபித்துக் காட்டி உள்ளது. எமது படையணிகளின் சமரிடும் வேகமும் வீச்சும் குலையாத கூட்டுச்செயற்பாடும், துரித கதியில் படை நகர்த்தும் ஆற்றலும், எதிர்த்துத் தாக்கும் உத்திகளும், அபாரமான துணிவும், நேர்த்தியான கட்டுப்பாடும் உலக இராணுவ நிபுணர்களை வியக்கச் செய்துவருகின்றன. இந்த வரலாற்றுச் சமரில் களமாடி வீரசாதனை படைத்த சகலபோராளிகளுக்கும் படை நகர்த்திய தளபதிகளுக்கும் இச்சமரில் பங்குகொண்டுபோராடிய எல்லைக் காப்புப் படையினருக்கும் எனது மனமார்ந்த பாராட்டுக்கள். இந்தப் பெரும் சமரில் எமது போராளிகளுக்கு ஊக்கமளித்து, உணவளித்து, இரத்தமளித்து, பின்கள வேலைகளில் உதவி அளித்து பெரும்பங்காற்றிய தமிழீழ மக்களுக்கும் எனது இதயம் கனிந்த நன்றிகள்.

## நில மீட்பு

நில மீட்புக்காகவே இந்தப்போர் நிகழ்ந்துகொண்டு இருக்கின்றது.

தமிழீழம் எமக்கு சொந்தமான நிலம்; வரலாற்றுரீதியாக எமக்கு உரித்தான நிலம்; எமது வாழ்விற்கும் வளத்துக்கும் ஆதாரமான நிலம்; நாம் பிறந்து, வாழ்ந்து, வளர்ந்த நிலம்; எமது தேசிய அடையாளத்துக்கு அடித்தளமான நிலம். இந்த நிலத்தைத் தனது சொந்த நிலம் என்கிறான் எதிரி. ஐம்பது ஆண்டுகளுக்குமேலாக இலங்கைத்தீவில் சிங்கள இனவாதிகள் ஆட்சிபீடமேறிய காலத்தில் இருந்து தமிழர் நிலம் விழுங்கப்பட்டுவருகிறது. தமிழர் நிலத்தை அபகரித்து, சிங்கள மயமாக்குவது ஒருபுறமும் தமிழர் நிலத்தை ஆக்கிரமித்து அதன் வளங்களை அழித்து அங்கு வாழ்ந்த மக்களை அகதிகளாக்குவதை இன்னொருபுறமுமாக எமது நிலம் மீது கொடுமை நிகழ்ந்துவருகின்றது.

இந்த அநீதிக்கு எதிராகவே நாம் போராடுகின்றோம். ஆகவே சாராம்சத்தில் எமது விடுதலைப் போரானது ஒரு மண்மீட்புப் போராகும். எமக்கு சொந்தமான நிலத்தை மீட்டு, அந்த நிலத்தில் எமது ஆட்சி உரிமையை - இறைமையை - நிலைநாட்ட நடைபெறும் போர் இது. இந்தப்போரின் நோக்கம், குறிக்கோள் என்ன என்பதை எமதுமக்கள் இப்பொழுது நன்கு உணரத் தொடங்கியுள்ளனர். சொந்த நிலத்தை இழந்து, அந்த நிலத்தில் அமைந்த வாழ்வை இழந்து, அகதிகளாக அலையும் மக்களுக்கு சொந்த மண்ணின் மகிமை புரியும்; அந்த மண்ணில் ஆக்கிரமித்துக் காலூன்றி நிற்கும் அந்நியனை விரட்டவேண்டிய அவசியம் புரியும். இந்தப் புரிந்துணர்வால் ஏற்பட்ட விழிப்புணர்வு காரணமாகவே இந்த மண்மீட்புப்போரில் எமது மக்கள் எமக்குப் பக்கபலமாக நின்று பல்வேறு வழிகளில் பங்களித்து வருகின்றார்கள்.

இன்று எமது தேச விடுதலைப் போரானது விரிவடைந்து மக்கள் போராக வளர்ச்சியும் எழுச்சியும் பெற்று வருகின்றது.

## அரசியல் தீர்வு

எனது அன்பார்ந்த மக்களே!

ஆண்டுதோறும் எனது மாவீரர் நினைவுரையில் நான் சமாதானத்தையும் சமாதான வழியிலான அரசியல் தீர்வையும் வலியுறுத்தத் தவறவில்லை.

அதேவேளை சமாதானவழியில் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண சிங்களப் பேரினவாதம் தயாராகவில்லை என்பதையும் நான் சுட்டிக்காட்டத் தவறவில்லை.

சிங்களத்து அரசியலில் ஆதிக்கம் செலுத்தி, மாறிமாறி ஆட்சிபீடம் ஏறி வரும் இரு பிரதான அரசியல் கட்சிகளும் சாராம்சத்தில் இனவாதக் கட்சிகளே. இவ்விருகட்சிகளும் சிங்கள பௌத்த பேரினவாதத்தின் சித்தாந்தத்தில் வேரூன்றி வளர்ந்தவை; அந்த வெறிபிடித்த தமிழ் விரோத சித்தாந்தத்தில் திளைத்தவை; கடந்த அரை நூற்றாண்டுகாலத்துக்குமேலாக தமிழினத்துக்கு எதிராக ஓயாத ஒடுக்குமுறையை முடுக்கிவிடுவதில் போட்டி இட்டு செயற்பட்டவை.

## சந்திரிகாவின் ஆட்சி தமிழருக்கு சாபக்கேடு

இந்த இன ஒதுக்குதல் வரலாற்றில் என்றுமில்லாதவகையில் தமிழர்களுக்கு கொடுமைகளை இழைத்த பெருமை சந்திரிகாவின் ஆட்சியையே சாரும். சந்திரிகாவின் ஐந்தாண்டு ஆட்சிக்காலம் தமிழ்மக்களுக்கொரு சாபக்கேடாக அமைந்தது.

தொடர்ச்சியான போரும் வன்முறையும், சாவும் அழிவும், பசியும் பட்டினியும் இடப்பெயர்வுமாக இக்கால கட்டத்தில் எமது மக்கள் எதிர்கொண்ட பேரவலம் மிகக்கொடுமையானது.

இருண்ட இரத்தம் படிந்த வரலாற்றுப் பக்கம் கொண்டதாக சந்திரிகாவின் அடக்குமுறை ஆட்சிக்காலம் நீண்டது.

இந்தக் கொடிய ஆட்சியானது தமிழினத்தின் தேசிய ஆத்மாவில் என்றும் அழியாத வடுவை ஏற்படுத்தியது.

## சந்திரிகா ஆடிய நாடகம்

உள்நாட்டில் தமிழர்களுக்கு எதிராக ஒரு பயங்கரவாத ஆட்சியை நடத்திக்கொண்டு வெளியுலகில் சமாதானம் விரும்பும் ஒரு ஜனநாயக தேவதையாக நாடகமாடினார் சந்திரிகா.

தமிழர் தாயகத்தை முழுமையாக ஏப்பம்விடும் ஒரு நாசகார போர்த்திட்டத்தை நடைமுறைப்படுத்திக்கொண்டு அதனை ஒருசமாதானத்துக்கான போர் முயற்சியாக வர்ணித்தார்.

முழு உலகமும் அவரை நம்பியது; அவரது சமாதான போருக்கு ஆதரவு வழங்கியது. முழு உலகத்தையும் கண்கட்டி ஏமாற்றிய அரசியல் பரப்புரை வித்தைகளுக்கு தமிழினத் துரோகிகளே சந்திரிகாவுக்கு பக்கத் துணையாக நின்றனர்.

நாம் சந்திரிகாவை நம்பவில்லை. தமிழரின் தேசிய பிரச்சினையை நீதியானமுறையில் தீர்த்துவைக்கும் நேர்மையும் உறுதிப்பாடும் அவரிடம் இருக்கவில்லை. சிங்கள பௌத்த பேரினவாதத்தின் நவயுக பிரதிநிதியாகவே நாம் அவரைக் கண்டோம்.

எனவேதான் நாம் சந்திரிகா அரசுடன் நேரடியாகப் பேச்சுக்களை நடத்த விரும்பவில்லை.

ஆயினும் நாம் சமாதானக் கதவுகளை மூடிவிடவில்லை. சர்வதேச சமூகத்தின் முன்னிலையில் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்துடன் சமாதானப் பேச்சுக்களில் பங்குகொள்ள நாம் தயாராக இருப்பதாக சென்ற ஆண்டு மாவீரர் நினைவுரையில் நான் அறிவித்தேன்.

நாம் சர்வதேச மத்தியஸ்தத்தை வேண்டியபோதும் சமாதானப் பேச்சுவார்த்தைக்கு ஏற்றதான சமாதானப்புறநிலைகள் உருவாக்கப்படவேண்டும் என்பதை வலியுறுத்திக்கூறினோம்.

போர் நெருக்கடி நீங்கிய நிலையில் இராணுவ ஆக்கிரமிப்பு, பொருளாதார நெருக்குவாரங்கள் அகன்ற ஓர் இயல்பான நல்லெண்ணச் சூழ்நிலையில் பேச்சுக்கள் நடைபெறவேண்டும் என்பதை நாம் தெளிவாக விளக்கியிருந்தோம்.

## சந்திரிகா அரசு ஏற்கவில்லை

சமாதானப் பேச்சுக்களுக்கு உகந்ததான ஒரு நல்லெண்ண சூழ்நிலை உருவாக்கப்படவேண்டும் என்ற எமது யோசனையை சந்திரிகா அரசு ஏற்க மறுத்தது.

போருக்கு ஓய்வு கொடுக்கவோ, நில ஆக்கிரமிப்பை நிறுத்தவோ, பொருளாதாரத் தடைகளை நீக்கவோ சந்திரிகா விரும்பவில்லை.

போரையும், பொருளாதாரத்தடைகளையும் தமிழர் மீதான அரசியல் அழுத்தங்களாகப் பாவிக்கவே அரசு விரும்பியது.

சமாதானத்துக்கான போர் என்ற சந்திரிகா அரசின் கோட்பாடு ஓர் இராணுவத் தீர்வையே குறித்து நிற்கிறது.

போர் மூலமாக தமிழர் தாயகத்தை ஆக்கிரமித்து, புலிகள் இயக்கத்தைத் தோற்கடித்து, தமிழினத்தை அடிமை கொள்வதே இத்திட்டமாகும்.

கடந்த ஐந்தாண்டு காலமாக இப்போர்த் திட்டத்தை செயற்படுத்தவே அவர் ஓயாது உழைத்தார்.

எத்தனையோ பேரழிவுகளைச் சந்தித்த போதும் அவர் தனது இராணுவத்தீர்வுத் திட்டத்தைக் கைவிடவில்லை.

இதனால் சமாதான வழிமுறைகள் பற்றியோ, சமாதானப் பேச்சுக்கள் பற்றியோ அவர் அக்கறையோடு சிந்திக்கவில்லை; அதற்கான ஆக்கபூர்வமான முயற்சிகள் எதையும் எடுக்கவில்லை.

## இரகசியப் பேச்சு நடத்த முயன்றார்

போரைத் தொடர்ந்து நடத்தியவாறு சில வரையறைகளுடன் இரகசியமாக பேச்சுக்களை நடத்தலாம் என மூன்றாம் தரப்பு மூலமாக சந்திரிகா எமக்குத் தூது அனுப்பியிருந்தார். நாம் அந்த யோசனையை ஏற்கவில்லை.

ஒருபுறம் போரை நடத்திக்கொண்டு மறுபுறம் சமாதானப் பேச்சை நடத்துவது நடைமுறைச் சாத்தியமற்றது; அத்தோடு அபத்தமானதும் கூட.

தொடரும் போரினால் எமது மக்கள் சாவையும் அழிவையும் அவலங்களையும் சந்தித்து நிற்க, நாம் எதிரியோடு கைகோர்த்து சமரசம் பேசுவது முடியாதகாரியம்.

அத்துடன் எந்த ஒரு நிபந்தனையோடும் காலவரையோடும் பேச்சுக்களை நடத்த நாம் தயாராக இல்லை.

சந்திரிகா உண்மையில் சமாதானத்துக்காக அன்புக்கரம் நீட்டவில்லை. பேச்சு என்ற போர்வையில் ஒரு பொறியை வைக்க முயன்றார். நாம் அந்தச் சமாதானப்பொறிக்குள் சறுக்கி விழத் தயாராக இல்லை.

## சந்திரிகாவின் போர்த்திட்டம் கடலோர மண்வீடு

கடலோரம் கட்டிய மண் வீட்டுக்கு நிகழ்ந்த கதிபோல் சந்திரிகாவின் போர்த் திட்டத்தை விடுதலைப் புலிகளின் 'ஓயாத அலைகள்' அடித்துச் சென்றுள்ளது.

இந்தச்சமரில் நாம் ஈட்டிய மாபெரும் வெற்றியின் விளைவாக இராணுவ சமபலம் எமக்குச் சார்பாகத் திரும்பியுள்ளது.

புலிகள் இயக்கத்தைப் பலவீனப்படுத்தி, இராணுவ மேலாதிக்க நிலையைப் பெற்றுவிடவேண்டும் என்ற சந்திரிகாவின் ஐந்தாண்டுகால பகீரத முயற்சியை நாம் ஒரு சில நாள்களில் முறியடித்துள்ளோம்.

ஆள்பலம், ஆயுதபலம், ஆன்மபலம், மக்கள்பலம் என்ற ரீதியில் சகல பலத்தோடும் நாம் வலுப்பெற்று நின்ற போதும்-

எமது தாயகத்தை மீட்டெடுக்கும் போரியல் சக்தி எம்மிடம் இருந்த போதும், நாம் சமாதானப் பாதையைக் கைவிடவில்லை.

உயிரழிவையும் இரத்தக்களரியையும் தவிர்த்து - சமாதான வழியில் - நாகரிகமான முறையில் - தமிழரின் சிக்கலைத் தீர்க்கவே நாம் விரும்புகிறோம்.

## சமாதானப் புறநிலை

சமாதானப் பேச்சுக்கள் ஒரு சமாதான நல்லெண்ண புறநிலையில் மூன்றாம்தரப்பு சர்வதேச மத்தியஸ்தத்துடன் நடைபெறவேண்டும் என்பதையே நாம் மீண்டும் வலியுறுத்த விரும்புகிறோம்.

சமாதானப் புறநிலை என்னும் போது போர் ஓய்ந்து பொருளாதாரத் தடைகள் அகன்று எமது மண்ணை ஆக்கிரமித்து நிற்கும் படைகள் விலகிய ஓர் இயல்பு நிலையையே நாம் குறிக்கின்றோம்.

போரையும் நில ஆக்கிரமிப்பையும், பொருளாதார நெருக்குவாரங்களையும் தமிழர் மீது அழுத்தம் செலுத்தும் உத்திகளாகப் பாவிப்பதை நாம் அனுமதிக்கமுடியாது. எவ்வித புறநிலை அழுத்தங்களும் இல்லாத இயல்பு நிலையில் சமத்துவமும் புரிந்துணர்வும் நிலவும் நல்லெண்ண சூழ்நிலையில் பேசுவதையே நாம் விரும்புகிறோம்.

நாம் பேச்சுக்கான கதவைத்திறந்தபடி சிங்கள தேசத்துக்கு ஒரு நல்லெண்ண சமிக்ஞையைக் காட்டுகிறோம்.

ஆயினும் நாம் வேண்டுவது போன்று ஒரு சமாதான சூழ்நிலையை தோற்றுவிப்பதற்கு சிங்கள அரசியல் தலைமைகள் இணங்கப்போவதில்லை என்பது எமக்குத்தெரியும்.

## நாம் கற்பனையில் வாழவில்லை

நீண்டகாலமாககடைப்பிடித்துவரும் இராணுவ வன்முறைப் பாதையை சிங்கள இனவாதிகள் இலகுவில் கைவிடப்போவதில்லை என்பதும் எமக்குத் தெரியும்.

எனவே சிங்கள அரசியல் தலைமைகளுடன் பேசி, இணக்கம் கண்டு எமது தேசிய சிக்கலுக்கு தீர்வுகாணலாம் என்ற கற்பனையில் நாம் வாழவில்லை.

## ஒரேயொரு மாற்றுவழி

மனித உரிமைகளை மதியாத சிங்கள இனவாத அரசியலும் அதன் தமிழர் விரோதப்போக்கும் தமிழ் மக்களுக்கு ஒரேயொரு மாற்றுவழியையே திறந்துவைத்திருக்கிறது. அதுதான் போராடிப் பிரிந்து சென்று தனியரசை உருவாக்கும் ஒரே வழி. இந்த வழியில்தான் சிங்களதேசம் தமிழ் மக்களைத் தள்ளிக்கொண்டிருக்கிறது.

சுதந்திர தமிழீழத் தனியரசே எமது தேசியப் பிரச்சினைக்கு இறுதியான - உறுதியான - தீர்வு என்பதை எமது மக்கள் எப்பொழுதே தீர்மானித்துவிட்டார்கள். எமது சுதந்திர அபிலாஷையை சிலுவையாகத் தோளில் சுமந்து இத்தனை ஆண்டுகளாக எமது இயக்கம் இரத்தம் சிந்திப் போராடி வருகிறது.

## வரலாற்றுத் திருப்பம்

இன்று எமது சுதந்திரப் பயணத்தில் - அந்த நீண்ட வரலாற்றுப் பயணத்தில் - ஒரு முக்கியமான திருப்பத்தை அடைந்துவிட்டோம்.

எமது போராட்ட இலக்கு ஒளிமயமான எதிர்காலமாக எமது கண்களுக்குத் தெரிகிறது. நாம் நம்பிக்கையுடன் எமது இலட்சியப் பயணத்தை தொடர்வோம்.

எமக்கு முன்னால் எழக்கூடிய எல்லாத் தடைகளையும் உடைத்தெறிந்து நாம் நெஞ்சுறுதியுடன் இணைந்து செல்வோம்.

நாம் ஒரே மக்கள் சக்தியாக - ஒன்றுபட்ட தேசமாக - ஒருமித்து- எழுந்து எமது இலட்சியப் பாதையில் விரைந்து செல்வோம்.

சாவைத் தழுவிய எமது வீரர்களின் ஆன்மாவாக சுதந்திரம் எமக்காகக் காத்து நிற்கிறது.

'புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்'

- என்று தெரிவித்தார். (உ-3-6)

## மடுவுக்கு உணவு

மன்னார்,நவ.28

மடுத்தேவாலயத்தில் தங்கியுள்ள அகதிகளுக்கு நிவாரணம் வழங்க நான்கு லொறிகளில் உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்கள் வவுனியாவில் இருந்து நேற்று அனுப்பப்பட்டன. (உ-3)

## முறைப்பாடு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கலையரங்கில் நடந்ததாகத் தெரிய வருகிறது.

யாழ்.பல்கலைக்கழக சிரேஷ்ட மாணவர்கள் சிலர் புதிதாகப் பல்கலைக்கழக அனுமதிபெறும் மாணவர்களை வன்னியில் வைத்து கீழ்த்தரமான முறையில் 'ராகிங்' செய்ததாகவும் -

இதுபற்றிய தகவல் தெரியவந்ததையடுத்து சம்பந்தப்பட்ட சிரேஷ்ட மாணவர்களைப் புலிகள் கைதுசெய்து தடுத்துவைத்திருந்ததாகவும் -

ஏற்கனவே செய்திகள் வெளியாகியிருந்தது தெரிந்ததே.

இவ்வாறு தடுத்துவைக்கப்பட்டு அண்மையில் விடுவிக்கப்பட்ட சில சிரேஷ்ட மாணவர்கள் யாழ்ப்பாணம் வந்து தமது கல்வியைத் தொடர்வதாகக் கூறப்படுகிறது.

அவர்களில் சிலரும் மற்றும் சில சிரேஷ்ட மாணவர்களும் சேர்ந்து - வன்னியில் 'ராகிங்' பற்றிய தகவலை அம்பலப்படுத்தியவர்கள் எனத் தெரிவித்து சில முதலாம்வருட மாணவர்களை நேற்று முன்தினம் இம்சைப் படுத்தியதாகத் தெரிகிறது.

அப்போதே வன்னிப் பகுதியைச் சேர்ந்த முதலாம் ஆண்டு மாணவன் ஒருவன் வயிற்றில் குத்தப்பட்டான்.

இந்த மாணவன் நேற்று யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டான்.

இந்தச் சம்பவம் குறித்து நியாயம் கேட்கச் சென்ற - வன்னிப் பகுதியைச் சேர்ந்த - மற்றொரு சிரேஷ்ட மாணவனும் அச்சுறுத்தப்பட்டதாகத் தெரிய வந்தது.

**குறிப்பு:**
ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட மற்றும் அச்சுறுத்தலுக்குள்ளான மாணவர்களின் பெயர், விவரம் அவர்களின் பாதுகாப்புக் கருதி தவிர்க்கப்பட்டுள்ளது. (ஆ-ர்)

## சந்திரிகா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஆட்சி என்றும் பிரபாகரன் கூறினார்.

'அமைதிக்காகப் போர்' என்ற சந்திரிகாவின் உத்தி, போர்க்களத்தில் புலிகளை வென்று, அதன் மூலம் அவர்களைப் பேச்சுக்கு இணங்குமாறு செய்தல் என்ற கொள்கையின் அடிப்படையில் அமைந்தது என்பதையும், அந்த வழியிலேயே அவர் ஆர்வம் உடையவர் என்பதையும் காட்டி நிற்பதாகப் பிரபாகரன் கூறினார்.

இந்தக் காரணங்களுக்காகத்தான் தாங்கள் அவருடன் நேரடியாகப் பேச்சுக்களில் ஈடுபடுவதற்கு மறுத்து வந்ததாகவும் பிரபாகரன் சொன்னார்.

ஆனால் 3ஆம் தரப்பு மத்தியஸ்தத்துக்கு இணங்கினால் பேச்சுக்களில் ஈடுபடத்தயார் என்றும் அவர் கூறியுள்ளார்.

இந்தப் பேச்சுக்கு வடக்கு - கிழக்கில் இருந்து படைகள் வெளியேற வேண்டும் என்றுநிபந்தனையாக இருப்பதால் பேச்சுக்கு வாய்ப்பு இல்லை என்றே கூறலாம்.

படைகள் தோல்வியைச் சந்தித்துள்ளதால், தேர்தலில் சந்திரிகா வெற்றிபெறும் வாய்ப்பு மங்கலாகவே உள்ளதாகக் கூறப்படுகிறது.

19 மாத காலமாக மேற்கொண்ட நடவடிக்கையில் கைப்பற்றிய பிரதேசங்களை மூன்றே நாளில் புலிகள் மீட்டுவிட்டதாக ரணில் விக்கிரமசிங்க கூறியுள்ளார்.

பதவியில் இருந்து சந்திரிகா வெளியேறவேண்டும் என்பதை பிரபாகரன் விரும்புகிறார். இது தெளிவாகத் தெரிகிறது. மாற்றம் ஸ்திரமற்ற நிலையை தோற்றுவித்துவிடும் என்பதாலே அவர் எதிர்க்கட்சிகளை ஏற்கக் கூடும். அவர்கள் மீது பெரிதும் நம்பிக்கை இருப்பதால் அல்ல - இப்படி பி.பி.ஸி தெரிவித்தது. (உ-3)

## சிப்பாய்கள்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சமாதானம் ஏற்பட வாய்ப்பில்லை.

இனங்களுக்கிடையே நிலவுகின்ற சந்தேகத்தின் விளைவாக தற்போதைய யுத்தம் தோன்றியுள்ளது.

வரலாற்றுக் காலம் தொடக்கம் தமிழர்களும் சிங்களவர்களும் இந்த நாட்டில் சமாதானமாக வாழ்ந்திருக்கின்றனர்.

தற்போதைய யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவந்து நடைமுறைச் சாத்தியமான, சகல தரப்பினரும் ஏற்றுக் கொள்ளக் கூடிய தீர்வைக்காண வேண்டும்.

இலங்கை ஒரு பௌத்த சிங்கள நாடு என்று அறிமுகப்படுத்துவதற்குப் பதிலாக இலங்கை என்று அறிமுகப் படுத்துவது போதுமானது - என்றார். (உ-5)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 28-11-1999இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org